தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை: ரூ. 20
நவம்பர், 2025

மலர்: 27
இதழ் : 07

ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித்துறை

ஏற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விட்டதைப் பிடித்தோம்!

வெள்ளி நிலா
மகளிர் சுய உதவிக் குழு



ரூ.291 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள்

நான் முதல்வன் திட்டம் கொடுத்த வாழ்க்கை

TNULM

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

Tamilnadu Urban Livelihoods Mission

"வண்ணங்கள் தீட்டுவது பெண்களுக்கு புதிதல்ல. அதனை மையப்படுத்தி வருமானம் ஈட்ட முடியும் என்பதனை சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் உணர்ந்துள்ளோம்."

உங்களின் எண்ணங்களை உயர்வாக வையுங்கள் உங்களது வாழ்க்கையிலும் உயர்வான இடத்திற்கு செல்வீர்கள்

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அன்புச் சகோதரிகளுக்கு வணக்கம்!

நமது முற்றம் இதழின் வழியே உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். நம் இதழைப் பிரித்து படிக்கும் ஒவ்வொருவருடனும் நான் நேரடியாக சந்திப்பதாகவே கருதுகிறேன்.

நமது சகோதரிகளுக்கு தன்னம்பிக்கையினை விதைத்து நம் தமிழ்நாட்டு அடையாளமாகத் திகழும் உங்கள் அனைவருக்கும் கடந்த மாதம் கொண்டாட்டமாக, மகிழ்ச்சியாக சென்றிருக்கும் என்று நம்புகிறேன். எனது சுற்றுப் பயணங்களில் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றி கேட்டறிவேன். நேரம் கிடைத்தால் குழுவினரையும் சந்தித்துப் பேசுவேன்.

தொடர்ந்து பலரையும் சந்திக்கும் போது ஒரு விஷயம் புலப்பட்டது. அதுதான், நம் சகோதரிகளில் பலருக்கும் ஆட்பட்டிருக்கும் மன அழுத்தம். தாங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறோம் என்பதை அறியாமலே பலரும் உள்ளனர். இங்கே பலரும் நினைப்பது போல நகரங்களில் வாழ்கின்றவர்களுக்கு மட்டும் மன அழுத்தம் ஏற்படுவதில்லை. கிராமங்களில் வாழ்கின்றவர்களும் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள் என்பதை நம் மக்கள் உணர வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து உருவானதுதான் மன அழுத்தத்தைப் போக்குவதற்கான பயிற்சி.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக, மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மன அழுத்தத்தைப் போக்குவதற்காக தகுந்த நபர்களைக் கொண்டு பயிற்சிக்கு ஏற்பாடு செய்தோம். உங்கள் பகுதியிலும் நடத்தி இருப்பார்கள். மன அழுத்தம் போக்கி நலமுடன் நம் சகோதரிகளும் அவர்தம் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழ நமது திராவிட மாடல் அரசு செய்திருக்கும் முன்னெடுப்பு இது.

குடும்பம், புறச்சூழல் போன்ற நெருக்கடிகளில் இருந்து எவ்வித அழுத்தமும் இல்லாமல் வெளியே வந்தால்தான் வெற்றி பெறமுடியும்; நம் கண்ணகி நகர் கார்த்திகா மாதிரி. பஹ்ரைனில் நடந்த மூன்றாவது, ஆசிய இளையோர் போட்டிகள் தொடரின் கபடி போட்டியில் இந்திய அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. இந்தியாவிற்கான இந்தப் பதக்கத்தை வென்றிருப்பவர் தான் இந்த கார்த்திகா.

இவரது வெற்றியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு சார்பில் அவருக்கு ரூ.25 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. அப்போது, கண்ணகி நகரில் கபடி மைதானம் அமைத்து தர வேண்டுமென கார்த்திகா கோரிக்கை விடுத்திருந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவரது கோரிக்கையைக் கவனிக்கும்படி உத்தரவிட்டார். அதன்படி, உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கண்ணகி நகர் பூங்காவில் சுமார் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் உள்ளரங்க கபடி மைதானம் அமைக்கும் பணி தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. கபடி வீராங்கனை கார்த்திகாவின் அபார சாதனையால் தமிழகம் முழுவதும் கண்ணகி நகர் புகழ் எதிரொலித்து வருகிறது. கண்ணகி நகரில் அமைக்கப்பட்டு வரும் இந்த உள்ளரங்க கபடி மைதானம், மழை, வெயில் கவலையின்றி கபடி வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெற உதவியாக இருக்கும். இந்த மைதானம் கார்த்திகா போல இன்னும் பல வீராங்கனைகளை உருவாக்கும் என திடமாக நம்புகிறேன்.

மன அழுத்தமின்றி நாம் வாழும்போதுதான் வெற்றிகளை இலகுவாக நெருங்க முடியும். இதையெல்லாம் நன்கு உணர்ந்து நீங்கள் உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் வளம் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மகளிரின் முன்னேற்றத்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் உறுதி செய்ய விரும்புவதோடு, மனதளவில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்பதையே நமது திராவிட மாடல் அரசு விரும்புகிறது. உங்களுக்குத் தேவையான உதவிகளை நம் திராவிட மாடல் அரசு என்றும் செய்யும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்கள் மூலமாக தமிழ்நாட்டில் ஏராளமான பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் அரசின் சலுகைகளை பெற்று பயனடைந்து வருகின்றனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டங்களில் மிக முக்கியமான திட்டம்தான் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

இந்தத் திட்டம் குறித்த விரிவான தகவல்களை பார்க்கலாம்

பெண்கள் வாழ்க்கையில் சொந்தமாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு 01 ஆகஸ்ட் 2014 அன்று தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள திட்டம்தான் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம். இந்தத் திட்டம் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

என்ன கிடைக்கும்?

இந்தத் திட்டத்தின் கீழ் தகுதி உடைய பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் மற்றும் ஊசிகள், பாபின்கள், நூல்கள், கால்மிதி உள்ளிட்ட பாகங்களும் வழங்கப்படும்.

யார் விண்ணப்பிக்கலாம்?

இந்தத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க

1. விதவை பெண்கள்
2. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்,
3. ஆதரவற்ற பெண்கள்,
4. மாற்றுத்திறனாளி பெண்கள்,

தேவையான ஆவணங்கள்

- குடும்ப அட்டை நகல்
- ஆதார் கார்டு
- இருப்பிடச் சான்று
- சாதிச் சான்றிதழ்
- வயதுச் சான்றிதழ்
- வருமானச் சான்றிதழ்
- பாஸ்போர்ட் சைஸ் போட்டோ – 2
- மொபைல் எண்/மின்னஞ்சல் ஐடி
- 6 மாதம் தையல் பயிற்சி முடித்த சான்று
- விதவைச் சான்றிதழ் அல்லது கணவனால் கைவிடப்பட்டவர் சான்றிதழ் அல்லது ஆதரவற்றோர் சான்றிதழ் அல்லது மாற்றுத்திறனாளி சான்றிதழ்

விண்ணப்பதாரர் 20 வயது பூர்த்தி அடைந்து இருக்க வேண்டும் மற்றும் 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் வசிக்கும் எந்த மாநில பெண்களும் உரிய ஆதாரங்களைக் கொண்டு விண்ணப்பிக்கலாம்.

5. மாற்றுத்திறனாளி ஆண்களின் மனைவிகள்,
6. சமூகத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள்,
7. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த பெண்களாக இருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரம் பெற விருப்பமுள்ள பெண்கள் 6 மாதம் தையல் பயிற்சி முடித்தவராகவும், தையல் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். மேலும் குடும்ப வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர் 20 வயது பூர்த்தி அடைந்து இருக்க வேண்டும் மற்றும் 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இது பெண்களின் முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதால் மாநில, மொழிபேதங்களை அரசு பார்ப்பதில்லை. ஆம்! தமிழ்நாட்டில் வசிக்கும் எந்த மாநில பெண்களும் உரிய ஆதாரங்களைக் கொண்டு இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க இயலும்.

அதேபோன்று முகாம் வாழ் இலங்கை தமிழர்களும் விண்ணப்பித்து பயன் பெறலாம். அதேபோல், விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினர்கள் யாரும் அரசு வேலைகளில் இருக்கக்கூடாது.

எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

இந்தத் திட்டத்தின் கீழ் இலவச தையல் இயந்திரத்தைப் பெற பொது சேவை மையம் அல்லது இ சேவை மையம் மூலமாக விண்ணப்பிக்கலாம். அருகில் உள்ள பொது சேவை மையத்திற்கு சென்று விண்ணப்பத்தை ஆன்லைனில் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும், விண்ணப்பத்துடன் தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் குடும்பப் பொறுப்பில் இருக்கும் போது வீட்டை விட்டு வெளியே சென்று வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில் இந்த இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் பெண்களுக்கு ஒரு காக்கும் அரணாக அமைகின்றது. மேலும் இந்த அற்புத வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நம்மால் முடிந்தவரை நமக்கு தெரிந்தவர்களுக்கு கூறலாமே....

–புவனேஸ்வரி தீபன்

எழுத்துலகின் முடிசூடா ராணி கோதை நாயகி

வரலாற்றில் என்றுமே பெண்களுக்கான பக்கங்கள் குறைத்தே ஒதுக்கப்பட்டுள்ளன. மறைக்கப்பட்ட (அ) முழுமையாக சொல்லப்படாத பலரின் வரலாற்றை உரக்கச் சொல்வோம்!

பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட காலத்திலேயே, பல தடைகள் தாண்டி எழுத்துலகில் தடம் பதித்தவர் வை. மு. கோதைநாயகி அம்மாள். எழுத்தாளர், நாவல் ஆசிரியர், பத்திரிகையாளர் எனப் பன்முகம் கொண்டவர் வை. மு. கோ. அவரது வாழ்க்கை பல பெண்களுக்கு உத்வேகமாக அமைந்தது என்றால் மிகையாது.

ஆரம்பகால வாழ்க்கை

கோதைநாயகி அம்மாள் காஞ்சிபுரம் மாவட்டம் அருகில் உள்ள நீர்வளூர் எனும் கிராமத்தில் டிசம்பர் 1, 1901ஆம் ஆண்டு பிறந்தவர். இன்று பெண்களுக்கு எழுத்துலக முன்னோடியாகத் திகழும் கோதைநாயகிக்கு கல்வி மறுக்கப்பட்டது என்றால் நம்பமுடிகிறதா? அவருக்கு ஐந்தரை வயது இருக்கும்போது, ஒன்பது வயது பையனான பார்த்தசாரதி என்பவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

கல்விக்கான பாதை தடைப்பட்டாலும், அவரது அறிவுத் தாகம் குறையவில்லை. அதைப் புரிந்துகொண்ட இணையர் கிடைத்ததால், வீட்டிலேயே கல்வி கற்கத் தொடங்கினார். பின்னர் தனித் தனி ஆசிரியர் வாயிலாக கல்வியில் தேர்ந்தவர் ஆனார். தமிழ் இலக்கியம், நவீன சிந்தனையில் மூழ்கிப் போனார். அவருக்கு பெரும் உத்வேகமாக இருந்தது மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கவிதைகள்.

நாடக உலகமும் கோதைநாயகியும்

சிறுவர்கள் ரசிக்கும்படி கதை சொல்லும் கோதைநாயகியின் திறனைப் பார்த்த அவரது கணவர், நாடகங்கள் பலவற்றுக்கும் அவரை அழைத்துச் சென்றார்.

நாடகங்களைப் பார்த்து ரசித்த கோதைநாயகிக்கு, நாடகங்கள் படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அப்போது தமிழ் ஓரளவுக்கு மட்டுமே எழுதத் தெரிந்த அவர், தனது தோழி பட்டம்மாள் உதவியோடு "இந்திர மோகனா" என்ற நாடகத்தை எழுதி முடித்தார். இந்த நாடகம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து பட்டம்மாளிடம் தமிழை

படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். அவரிடம் இருந்து அடுத்தடுத்த நாடகப் படைப்புகள் வெளிவரத் தொடங்கின.

எழுத்துலகில் புரட்சி

இவரது "இந்திர மோகனா" நாடகம் நூலாக வந்து நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. அந்த ஊக்கத்தில் முதன்முதலாக "வைதேகி" எனும் நாவலை எழுதி முடித்தார். இதை வடுவூர் துரைசாமி என்பவர் திருத்தம் செய்து கொடுத்து, தனது மனோரஞ்சனி இதழில் அதை வெளியிட்டு ஊக்கப்படுத்தினார்.

அவர் அளித்த ஊக்கத்தில் "ஜகன்மோகினி" எனும் மாத இதழை பொறுப்பேற்று நடத்தினார். கோதைநாயகி பொறுப்பேற்ற பின்பு இதழுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. உ.வே. சாமிநாதன், கொத்தமங்கலம் சுப்பு, பெ. தூரன் போன்ற எழுத்தாளுமைகள் அதில் பங்களிப்பு செலுத்தினர்.

பெண் விடுதலை, கைம்பெண் மறுமணம், இந்து – முஸ்லீம் ஒற்றுமை உள்ளிட்ட முற்போக்குக் கருத்துகளால் "ஜகன்மோகினி" இதழ் வளர்த்தெடுக்கப்பட்டது.

நாவல், சிறுகதை, கட்டுரை, துப்பறியும் புனைவு என எழுத்தின் பல்வேறு தளங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அதிலும் குறிப்பாக தமிழில் முதன்முதலில் துப்பறியும் நாவல் எழுதிய பெண்மணி என்ற பெருமை இவரையே சேரும். இவரது துப்பறியும் நாவல்களும் சமூக விழிப்புணர்வுக் கருத்துகளை கொண்டிருந்தன.

இவரது பெண் கதாபாத்திர படைப்புகள் வலுவான சமூக அக்கறை கொண்டவையாக, முற்போக்குச் சிந்தனை உடையனவாக இருக்கும்.

காந்தியடிகளின் சந்திப்பும் திருப்பமும்

1925ஆம் ஆண்டு காந்தியடிகள் தமிழ்நாடு வருகை தந்த போது, கோதைநாயகிக்கு அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த நிகழ்வு அவர் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.



“ஐந்தரை வயது இருக்கும்போது, ஒன்பது வயது பையனான பார்த்தசாரதி என்பவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

"ஜகன்மோகினி" எனும் மாத இதழை கோதைநாயகி பொறுப்பேற்ற பின்பு இதழுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.”

காந்தியடிகளின் எளிமையாலும் ஆளுமைத் தன்மையாலும் ஈர்க்கப்பட்ட கோதைநாயகி, தன்னை விடுதலைப் போராட்டங்களில் இணைத்துக் கொண்டார். ஆடம்பர ஆடைகளைத் தவிர்த்துவிட்டு, கதர் ஆடை உடுத்தத் தொடங்கினார். கதர் ஆடை விற்பனையை ஊக்குவித்தார். காந்தியடிகளின் அழைப்பை ஏற்று கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். இப்படிப் பல போராட்டங்களில் தன்னை இணைத்துக்கொண்ட கோதைநாயகி, அதற்காக கைது செய்யப்பட்டு சிறைவாசமும் சென்றுள்ளார்.

திரைத்துறையில் பங்களிப்பு

கோதைநாயகியின் எழுத்து திரைத்துறை சார்ந்தவர்களை ஈர்த்தது. அவரது புகழ்பெற்ற நாவல்களில் ஒன்றான 'அனாதைப் பெண்' அதே பெயரில் திரைப்படமாக உருவாக்கப்பட்டது. அதன்பிறகு அவரது 'தயாநிதி', 'ராஜமோகன்' உள்ளிட்ட சில நாவல்களும் படமாக்கப்பட்டன. இதில் 'தயாநிதி' என்ற நாவல் சித்தி என்ற பெயரில் படமாக வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. இதில் ஜெமினி கணேசனும், பத்மினியும் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இக்கதை பின்னாட்களில் தெலுங்கு, கன்னடம், இந்தி, மலையாளம் போன்ற மொழிகளில் படமாக்கப்பட்டன.

இறுதிக்காலம்

அயராது உழைத்து வந்த கோதைநாயகி அம்மாளுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது அவரது மகன் ஸ்ரீநிவாசனின் மரணம். மகனைப் பறிகொடுத்த சோகத்தால், தன் உடல் மீது அக்கறை செலுத்தத் தவறிவிட்டார். காசநோய்க்கு ஆளான அவர், 1960 ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் தேதி காலமானார். இன்றும் எழுத்துலகில் சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு கோதைநாயகி முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

–பாண்டியன்



ரூ 291 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.10.2025 அன்று தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், 141 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவிலான 117 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 291 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 83 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், 15 ஆயிரம் பயனாளிகளுக்கு வாழ்வாதார நிதியின் கீழ் உதவிகள், 18 ஆயிரத்து 266 பயனாளிகளுக்கு சுய உதவிக்குழு அடையாள அட்டைகள் என பல்வேறு துறைகளின் சார்பில் 2 லட்சத்து 44 ஆயிரத்து 469 பயனாளிகளுக்கு 587 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பல்வேறு துறைகளின் சார்பில் 2 லட்சத்து 44 ஆயிரத்து 469 பயனாளிகளுக்கு 587 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி கருணாநிதி, திரு. ராபர்ட் புரூஸ், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜா, திரு. அப்துல் வஹாப், திரு. சதன் திருமலைக்குமார், ப திரு. பழனி நாடார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருது கொடுத்த ஊக்கம்

நான் சத்யா தனபால், எனது கணவர், இரு மகன்களுடன் திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி வட்டாரம், புதூர்பாளையம் ஊராட்சியில் வசித்து வரும் நான், எங்களது ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வைரம் மகளிர் சுய உதவிக் குழுவில் நான்கு ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வருகிறேன்.

எனது கணவரின் வருமானத்தைக் கொண்டே குடும்ப வரவு செலவுகளை மிகுந்த சிரமங்களுக்கு இடையே மேற்கொண்டு வந்த எனக்கு வாழ்க்கையின் மிகப்பெரிய நல்வாய்ப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், புதூர்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சமையல் பணி செய்வதற்காகத் தேர்வு செய்யப்பட்டேன். மேலும், இப்பணியை திறம்பட செய்வதற்கு பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் முறையான பயிற்சி பெற்று தினந்தோறும் 49 குழந்தைகளுக்கு சமையல் செய்து தருகிறேன்.

இக்காலை உணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு தாயுள்ளத்தோடு சமைப்பதும், பரிமாறுவதும் எனக்கு மிகுந்த மனநிறைவு தருவதுடன், குழந்தைகளோடு நானும் குழந்தையாகவே மாறி உற்சாகத்தோடு பணியாற்றி வருகிறேன்.

நமது பள்ளி குழந்தைகளுக்கு ஆரோக்கியமான இயற்கை உணவு தந்திடும் புதிய முன்னெடுப்பாக பள்ளி வளாகத்தில் காலியாகவுள்ள இடத்தில் தோட்டம் அமைத்து காய்கறி மற்றும் கீரைகள் போன்றவைகளை பயிர் செய்து அவற்றை காலை உணவு சமையலில் பயன்படுத்தி வருகிறேன். சென்னையில் நடைபெற்ற "கல்வியிற் சிறந்த தமிழ்நாடு" எனும் விழா நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காலை உணவுத் திட்ட செயலாக்கத்தில் எனது பங்களிப்பை பாராட்டும் விதமாக எனக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விருது வழங்கப்பட்டது. இவ்விருதின் மூலம் எனக்கு புதிய உத்வேகமும், கடமையுணர்வுடன் செயலாற்ற வேண்டும் என்ற உறுதியும் ஏற்பட்டது. இந்த விருதின் ஊக்கத்தினால் எனது கிராமப் பெண்களுக்கு முன்னுதாரணமாக விளங்குவதும், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமும், சுயசம்பாத்தியமும் பெற முடியும் என்ற நம்பிக்கையும் பலருக்கும் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் எங்களது ஊராட்சியில் ஏழை எளிய குழந்தைகள் பசியாறுவதுடன், பள்ளி இடைநின்றலும் வெகுவாக குறைந்து வருவது எனக்கு மிகுந்த பெருமையாகவுள்ளது.

எனக்கு இப்பணியை வழங்கிய ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது மற்றும் எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கரும்பில் பருசீவல் நாற்றுக்கள் (Sugarcane Chip Bud seedlings) உற்பத்தியில் வருமானம் ஈட்டும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் புதிய பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, பயிற்சியளித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பொதுவாக, கரும்பு விவசாயிகள் நடவுக்கு சுமார் நான்கு டன் விதைக் கரும்பிலிருந்து 30 ஆயிரம் இருபரு விதைக்கரணைகளை பயன்படுத்துவார்கள். இதனால், ஏக்கருக்கு சுமார் 20 ஆயிரம் ரூபாய் செலவாகும். இம்முறையில் சில இடங்களில் நாற்றுக்கள் முளைக்காமல் கரும்பு வயலில் ஆங்காங்கே வெற்றிடங்கள் தெரியும். ஆனால், பருசீவல் நாற்று நடவு முறையில், பூச்சி, நோய் தாக்காத, அதிக மகசூல் தரும் கரும்பு இரகங்களின் விதைக்கரணைகளிலிருந்து, விதைப்பருக்களை மட்டும் பிரித்தெடுத்து, பிளாஸ்டிக் குழித்தட்டுகளில் வைத்து நிழல் வலைக்கூடங்களில் வளர்த்து, ஒரு மாதத்திற்குப் பின் தரமான கரும்பு நாற்றுக்களை மட்டும் தேர்வு செய்து நடவு செய்தால், கரும்பு வயலில் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு, கரும்பு மகசூல் அதிகரிக்கும். இதனால், விதைக்கரும்புக்கான செலவும் கணிசமாக குறைவதோடு, கரும்பின் சாகுபடிக் காலம் ஒரு மாதம் குறைகிறது. அதிகக் கிளைகள் வெடித்து, தனிக்கரும்பின் எடையும் அதிகரிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, சென்ற 2024-25 ஆம் நிதி ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில், 'சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, அலகுக்கு இரண்டு லட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் முதன்முறையாக, கரும்பு சாகுபடி செய்யப்படும் கடலூர்,

தரமான கரும்பு நாற்றுக்களை மட்டும் தேர்வு செய்து நடவு செய்தால், கரும்பு வயலில் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு, கரும்பு மகசூல் அதிகரிக்கும்

வ. எண்	மாவட்டம்	வட்டாரம்	கிராம ஊராட்சிகள்
1.	கடலூர்	கடலூர்	சி.என்.பாளையம்
		அண்ணாகிராமம்	பூண்டி, உறையூர்
		பண்ருட்டி	சிலமிபாத்தான்பேட்டை
		விருத்தாச்சலம்	கருவேப்பிலான்குறிச்சி
		கம்மாபுரம்	சாத்தமங்கலம்
		நல்லூர்	ஆதமங்கலம்
		ஸ்ரீமுஷ்ணம்	கானூர்
		குமராட்சி	அகரநல்லூர்
		காட்டுமன்னார்கோவில்	கொண்டசமுத்திரம்
2.	விழுப்புரம்	திருவெண்ணைநல்லூர்	டி.புதுப்பாளையம், அமூர், மலையம்பட்டு, சரவணப்பாக்கம், மேலமங்கலம், அருண்குருக்கை, டி,மலவராயனூர்
		விக்கிரவாண்டி	முண்டியம்பாக்கம், இ.மண்டகப்பட்டு, பிரம்மதேசம், தும்பூர், அசூர்
3.	கள்ளக்குறிச்சி	சின்னசேலம்	உலங்காத்தான்
		கள்ளக்குறிச்சி	மாத்தூர்
		சங்கராபுரம்	அரசம்பட்டு, செம்பரம்பட்டு, நெடுமானூர்
		ரிஷிவந்தியம்	பாக்கம், எடுத்தனூர், பவந்து,
		திருக்கோவிலூர்	சடைக்கட்டி, பாடியாந்தல் பழங்கூர்,
		உளுந்தூர்பேட்டை	காட்டுசெல்லூர்
4.	திருவண்ணாமலை	தண்டராம்பேட்டை	அகரம் பள்ளிப்பட்டு, கோட்டையூர், வானாபுரம், தொண்டமானூர், தேன்முடையனூர்
		செங்கம்	பாச்சல், மேல்பென்னத்தூர், உச்சிமலைக்குப்பம், கரியமங்கலம், குப்பநத்தம்
		புதுப்பாளையம்	அமர்நாதபுதூர், புதூர்செங்கம்
5.	வேலூர்	காட்பாடி	பாலகுப்பம்
		கன்னியம்பாடி	சாலமநத்தம்
		கே.வி.குப்பம்	லத்தேரி, கவசம்பட்டு

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் 50 கிராம ஊராட்சிகளில் கரும்பில் நாற்று உற்பத்தியில் ஆர்வமுள்ள 20 சுய உதவிக்குழு மகளிரை ஒன்றாக இணைத்து குழு அமைத்து ஒவ்வொரு குழுவுக்கும் ரூ.2 லட்சம் வீதம் 50 குழுக்களுக்கும் மொத்தம் ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டது.

இச்சுழல் நிதியின் மூலம், 300 சதுர மீட்டர் பரப்பில் நிழல் வலைக்கூடம் அமைத்து, விதைக்கரணையிலிருந்து பரு எடுக்கும் மோட்டார் இயந்திரம், ஆயிரம் பிளாஸ்டிக் குழித்தட்டுக்கள், தேங்காய் நார் கொள்முதல் போன்ற பணிகளை இம்மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை மேற்கொண்டார்கள்.

தற்போது, இந்த 50 இடங்களிலும் பருசீவல் கரும்பு நாற்று உற்பத்தி துவங்கி, அருகில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்துள்ள கரும்பு விவசாயிகளுக்கு தரமான கரும்பு பருசீவல் நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தரமான கரும்பு பருசீவல் நாற்றுக்கள் தேவைப்படும் விவசாயிகள் மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கிராம ஊராட்சிகளில் நாற்று உற்பத்தியினை மேற்கொண்டு வரும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு பயனடையலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

விற்பனையில் சாதனை: மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு விற்பனை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக விழாக் காலங்களுக்கு ஏற்ற வகையில் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தீபாவளியினை முன்னிட்டு ரூ. ஐநூறு முதல் ரூ. இரண்டாயிரத்து ஐநூறு வரையிலான மதிப்பு கொண்ட "மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்" (Mathi Diwali Gift Hampers) கைபேசி எண் வாயிலாக மொத்தமாகவும் தனியாகவும் விற்பனை செய்யப்பட்டது.

35 ஆயிரத்து 998 பரிசுப் பெட்டகங்கள் வழியே ரூ. 1 கோடியே 64 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது

இந்தப் பரிசுப் பெட்டகத்தில், தமிழர்களின் பாரம்பரிய ஆடையான வேட்டிகள், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பனை ஓலைப் பொருட்கள், வாழைநார் கூடைகள், கோரையில் செய்யப்பட்ட கலைப்பொருட்கள், பல்வேறு பொருட்களைக் கொண்ட பரிசுப் பெட்டகங்கள், உலர் பழங்களில் செய்யப்பட்ட சுவையும் ஆரோக்கியமும் நிறைந்த லட்டுகள், உலர் திராட்சை வகைகள், தரமான முந்திரிப் பருப்புகள், கற்சிற்பங்கள், சுடுமண்ணில் செய்யப்பட்ட ஆபரணங்கள், தரமான செக்கு எண்ணை வகைகள், ஒளித்திருவிழாவிற்கு மேலும் ஒளிக்கூட்டும் வண்ண மெழுகுவர்த்திகள், உணவுக்கு மணமூட்டும் மசாலாப் பொருட்கள், வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் அழகுற கட்டுமானம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

அனைத்து மாவட்டங்களிலும் 17.10.2025 முதல் 20.10.2025 வரை 35 ஆயிரத்து 998 எண்ணிக்கையிலான பரிசுப் பெட்டகங்கள் வழியே ரூ. 1 கோடியே 64 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்களை வாங்கி பயன்படுத்தி, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடுமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனநலம் காப்போம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புரங்களிலுள்ள ஏழை எளிய மகளிரை ஒன்றுபடுத்தி, சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, அச்சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. தற்போதைய கால மாற்ற சூழ்நிலையிலும், போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலும், ஒவ்வொரு தனி நபரும் பல்வேறு விதமான மன அழுத்தத்திற்கு உட்பட்டு, பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுய உதவிக் குழு மகளிர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சிறந்த மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு பெற்று மகிழ்ச்சியாக வாழ்வதற்கென மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் உள்ள 388 வட்டாரங்களிலும் 12 ஆயிரத்து 525 ஊராட்சிகளில் உள்ள 3 லட்சத்து 31 ஆயிரத்து 510 மகளிர் சுய உதவி குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும், 16 ஆயிரத்து 562 பள்ளிகள் மற்றும் ஆயிரத்து 602 கல்லூரிகளில் பயிலும் மாணவ – மாணவியர்களுக்கு மனநலம் குறித்த பயிற்சியும் போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சியையும் வழங்கி வருகிறது.

அதில் மன நலம் மற்றும் மன நோய், தற்கொலை தடுப்பு, கட்டுக்கதைகள் மற்றும் தவறான கருத்துக்கள், சமூக மனநலம், மனநல சட்டம் மற்றும் திட்டங்கள், போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. மேலும், வளரிளம் பெண்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் முதியோர்களுக்கான மன நல இடையீடுகள் குறித்தும் பயிற்சியில் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது.

சுய உதவிக் குழு மகளிர் குடும்பத்தினர் சிறந்த மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு பெற்று மகிழ்ச்சியாக வாழ வழிசொல்லும் நிகழ்ச்சி

விட்டதைப் பிடித்தோம்! – வெள்ளி நிலா குழு

"வாங்க வாங்க" என்று வாஞ்சையோடு வரவேற்றனர், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளி நிலா குழுவினர். "கொரோனா முடிந்து, வெறுமனே எங்கள் வாழ்வாதாரத்திற்காகத் தொடங்கப்பட்ட இந்தக் குழு எங்களுக்கு பெருமையைத் தேடி தருமென்று நினைக்கவேயில்லை. இப்போது பேட்டி வேறு கொடுக்கிறோம்." என்று சிரிப்போடு பேசலானார், ஊக்குநர் மஞ்சுளா.

"எனக்கும் குழுவில் இருக்கும் சிலருக்கும் 20 ஆண்டுகள் சுய உதவிக் குழுவில் பயணித்த, வழிநடத்திய அனுபவம் இருக்கு. இருந்தாலும், சில காரணங்களுக்காக அந்தப் பழைய குழுவை கலைத்துவிட்டோம். எந்தக் குழுவிலும் செயல்படாமல் இருந்த காலத்தில், எங்கள் குடும்ப பொருளாதரத்தில் ஒரு சரிவு இருந்தது. அதைவிட, 'எதையோ தவறவிட்ட உணர்வு' தான் முதன்மையாக என்னுள் அடிக்கடி வந்துபோனது. என் சக உறுப்பினர்களுக்கும் அதே எண்ணம்தான். அதன் விளைவாகவே உருவானதுதான் 'வெள்ளி நிலா' குழு.

"2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 15 நபர்களுடன் குழுவை ஆரம்பித்தோம். இப்போது தையல், மலர் வணிக கடை, இ-சேவை மையம் மற்றும் சில்லறை பூ விற்பனை என்று பல்வேறு தொழில்களுடன் சொந்த காலில் நிற்கிறோம்" என்று கடந்தகால நினைவுகளைத் தூசிதட்டினார்.

பணம்! பணம்!! பணம்!!!

"மஞ்சுளா அக்காதான், எங்க எல்லோருக்கும் வழிகாட்டி. முதலில், குழுவில் சேர்ந்து பயணிக்க, தொழில் செய்ய, பலருக்கு தயக்கம் இருந்தது. நான் உட்பட தயங்கினேன். சேமிப்பு மட்டுமே போதும் என்று இருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல, ஒரு பெண்ணின் தலைமையில் மற்ற பெண்கள் எல்லாம் சேர்ந்து ஒன்றாக செயல்படுவதைப் பார்த்தேன். ஒவ்வொருவரும் ஒரே நேரத்தில் குடும்பச் செலவு, தொழில், சேமிப்பு என்று அனைத்தையும் கையாள்வதைப் பார்த்தேன். நானும் எனக்கே உரித்தான வகையில் பணத்தை கையாளத் தொடங்கினேன்." என்கிறார் குழுவின் பிரதிநிதி அமுதா.

அடுத்து பேசிய பொற்கொடி, "பணம் மனிதர்களுக்கே அவசியமான ஒன்று. குறிப்பாக பெண்களுக்கு. அதை எப்படி கையாள்வது என்கிற வித்தையை சுய உதவிக் குழுக்கள் கற்றுத் தருகின்றன. நூறு, ஆயிரம் என்று தொடங்கி இன்று எங்கள் பெயரில் லட்சக்கணக்கில் சேமிப்பு உள்ளது என்பதே மலைப்பான விஷயமாக இருக்கிறது. அதே சமயம், லட்சக் கணக்கில் கடனும் தான் வாங்குகிறோம் என்பது

தனிக்கதை " என்று புன்னகைத்தார்.

தொடர்ந்து உறுப்பினர் சங்கீதா பேசுகையில், "இப்போது நாங்கள் மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறோம். உள்கடனாக மூன்று லட்சம் வரை சுழற்சி செய்யப்படுகிறது. உள்கடன் வெளிக்கடன் என சேர்த்து எங்களில் பலர் மாதம் 1 லட்சம் ரூபாய் வரை அசலும் வட்டியுமாக செலுத்துகிறோம். தற்போதிருக்கும் எங்கள் ஒட்டுமொத்த வங்கி சேமிப்பு ரூபாய் 6 லட்சம் ஆகும். இந்த நிலைக்கு வர எங்களின் தொடர் உழைப்பும் ஒற்றுமையும் குழு உறுப்பினர்கள் அளிக்கும் ஆதரவும் அத்துடன் மகளிர் திட்ட அலுவலர்களின் வழிகாட்டுதலுமே உதவியாக இருந்தது.

"எத்தனையோ குழுக்களுக்கு மத்தியில் எங்கள் குழு விருது வாங்கியதற்கு காரணம், எங்களுடைய 'முறையான வரவு செலவுக் கணக்கு', 'கடன்களை முறையாகத் திருப்பி செலுத்துதல்' ஆகியவைதான். குறிப்பாக வருமானத்தைப் பெருக்க ஒரு பக்கம் முயற்சித்தாலும் வருமானத்துக்கு ஏற்றாற்போல் மட்டும்தான் நாங்கள் கடனே பெறுவோம். பல குழுக்களில், உள்கடன் வழங்கும்போது 'அவங்களுக்கு அவ்வளவு ஏன்?, நானும் கேட்டிருந்தேனே? எனக்கு கிடைக்கலயே!' என ஒருவருக்கொருவர் முரண்பாடுகள் வருவதுண்டு. ஆனால் எங்கள் குழுவில் அப்படி ஏதும் எழாது. ஏனெனில், இது பாரபட்சம் இல்லை முறையாகப் பணத்தைக் கையாளும் திறன் என்ற புரிதல் எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது" என்று சிக்கலான சூழலுக்கு ஒரு சிறப்பான தீர்வையும் போகிறபோக்கில் சொல்லிவிட்டுப் போனார் அபிராமி.

> "பணம் மனிதர்களுக்கே அவசியமான ஒன்று. குறிப்பாக பெண்களுக்கு. அதை எப்படி கையாள்வது என்கிற வித்தையை சுய உதவிக் குழுக்கள் கற்றுத் தருகின்றன.

கல்வியே ஆணிவேர்

தொடர்ந்து, உறுப்பினர் இந்திரா பேசுகையில், "எங்கள் குழுவில் படிப்பு தொடர்பான செலவுகளுக்கு ஒருபோதும் உள்கடனை மறுப்பதில்லை. ஏனெனில், படிப்பு தான் முக்கியம் என்று நாங்கள் ஆழமாக நம்புகிறோம். அதையேதான் எங்கள் பகுதிகளிலிருக்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் எடுத்துரைக்கிறோம். மாணவர்களிடையே சிலர் போதைப் பழக்கம் பரவியுள்ளதை நாங்கள் பார்க்கிறோம். அதற்கு, பெற்றோர்களும் காரணம் தான். அவர்களிடமிருந்தே பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர். பெற்றோரும் பிள்ளைகளின் மீது முறையாக கவனம் செலுத்தினால் அவர்கள் படிப்பதில் இருந்து திசைதிரும்ப மாட்டார்கள்" என்றவர், மேலும், "பள்ளிக் குழந்தைகளுக்கான விழிப்புணர்வைத் தவிர, கோயிலைத் தூய்மை செய்வது அருகிலிருக்கும் ஆதரவற்றோர் இல்லமான அன்பகத்துக்குச் சென்று உணவளிப்பது உள்ளிட்ட பணிகளிலும் ஈடுபடுகிறோம்." என்று கூறினார்.

மீண்டும் பேசிய ஊக்குநர் மஞ்சுளா, "ஏறத்தாழ இருபது ஆண்டுகள் குழு நடத்தியும் முன்பு சாதிக்க இயலாததை இந்த நான்கு ஆண்டுகளில் சாதிக்க மயிலாதுறை திட்ட அலுவலர்களின் ஊக்கமும் உறுதுணையும் முக்கியமானது." என்று தெரிவித்தார்.

மேலும், "எங்கள் குழுவிற்கு மணிமேகலை விருதை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை திட்ட அலுவலர், தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் எங்களுக்கு நம்பிக்கையூட்டும் அனைவருக்கும் நன்றி" என்று கூறி விடை பெற்றனர்.

ஆண்டுக்கணக்கான அனுபவ அறிவைக் கொண்டு விருதை வென்றிருக்கிறது 'வெள்ளி நிலா குழு'. அடுத்த மாதம் மற்றொரு குழுவோடு சந்திப்போம்!

–ப.க. புகழ்ச்செல்வி

யூடியூப் – வருமான ரகசியம்

யூடியூப்பில் காணொலி பதிவிடும் ஒவ்வொருவருக்கும் ஒரே கேள்விதான். "வீடியோவிற்கானப் பார்வைகள் நல்லா இருக்கு. இதிலிருந்து பணம் கிடைக்குமா?" என்ற அக்கேள்விக்கு, கிடைக்கும் என்பதுதான் பதில். ஆனால், மந்திரத்தில் மாங்காய் வரும் காரியமல்ல அது. அதற்கென ஒரு நோக்கமும், முறையான திட்டமிடலும், தொடர்ச்சியான உழைப்பும் வேண்டும்.

ஏனெனில் பணமதிப்பாக்கம் (யூடியூபர்கள் மொழியில் சொல்வதானால் மோனடைசேஷன் – Monetization) என்பது வெறுமனே "வீடியோவால் பணம் சம்பாதிப்பது" மட்டுமல்ல. நீங்கள் கற்றதைப் பகிர்ந்ததற்காகவும், உங்கள் நேரத்துக்கும் முயற்சிக்குமான டிஜிட்டல் வழி ஊதியம் தான் பணமதிப்பாக்கம்.

பணமதிப்பாக்கம் (Monetization) என்றால் என்ன?

உங்கள் காணொலிகளைப் பார்க்கும் பார்வையாளர்களுக்கு விளம்பரங்களைக் (Ads) காட்டி, அதன் வருவாயிலிருந்து ஒரு பங்கினை உங்களுடன் பகிர்கிறது யூடியூப். குறிப்பிட்ட யூடியூப் பக்கத்துக்கும் யூடியூப் நிறுவனத்துக்கும் இடையில் இதற்கென ஒரு ஒப்பந்த செயல்முறை உண்டு. இதற்கு YouTube Partner Program (YPP) என்று பெயர். இதைச் செய்து முடிக்க சில விதிமுறைகள் உண்டு. அவை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

எப்படி தொடங்கலாம்?

- குழுவின் பெயரில் சேனல் தொடங்குங்கள்.
- குழுவாக சேர்ந்து உங்கள் திறமைகளை, அனுபவங்களை, படைப்புகளைக் குறித்து காணொலிகளைத் தயாரியுங்கள். எப்படி நல்ல காணொலிகளை எளிமையாக தயாரிப்பது என்பது குறித்தும் கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம்.
- பின்னர், நம் யூடியூப் பக்கத்தையும், அதற்கான வங்கிக் கணக்கையும் கூகுள் ஆட்சென்ஸ் உடன் இணையுங்கள். (AdSense Linking) YouTube Studio Earn AdSense Add Account.

பணமதிப்பாக்கத்துக்கான விதிகள்

முழு பணமதிப்பாக்கம்

- கடந்த 12 மாதங்களில், ஆயிரம் பின் தொடர்பவர்கள் + நான்கு ஆயிரம் மணி நேர பார்வை நேரம் இருக்க வேண்டும்.

அல்லது

- 90 நாட்களில், குறுங்காணொலிகளுக்கு மட்டும் ஆயிரம் பின்தொடர்பவர்கள் + 10 மில்லியன் பார்வைகள் இருக்க வேண்டும்.

பகுதியளவு பணமதிப்பாக்கம்

- 500 பின்தொடர்பவர்கள் + 3 காணொலிகள் + மூன்று ஆயிரம் மணிநேர பார்வை நேரம் அல்லது 3 மில்லியன் குறுங்காணொலிக்கான பார்வைகள் இதன் மூலம் சூப்பர் சாட் (Super Chat), சந்தாதாரர் (Memberships), வணிகச் சந்தை ஒருங்கிணைப்பு (Merchandising Store Integration) போன்ற பணமதிப்பாக்க வழிகள் திறக்கப்படும்.

குறுங்காணொலி (Shorts) வழி வருமானம்

குறுங்காணொலிகள் வழியாகவும் வருமானம் பெறலாம். ஆனால் இதற்கு சில விதிகள் உள்ளன:

- விளம்பர வருமானம் (Ad Revenue) பகுதியளவு பிரிக்கப்பட்டு பங்கீடு செய்யப்படும்.

கவனத்துக்கு

கடந்த ஜூலை 15, 2025 அன்று யூடியூப் வெளியிட்ட புதிய பணமதிப்பாக்க கொள்கை, காணொலிகளில் "Inauthentic Content" அதாவது நம்பத்தன்மையற்ற உள்ளடக்கம் என்ற வகையை அறிமுகப்படுத்தியது. இதன் படி, செயற்கை நுண்ணறிவு (AI), டெக்ஸ்ட் டூ ஸ்பீச் காணொலிகள் (TTS Videos), புகைப்படங்களை மட்டும் வைத்து உருவாகும் காணொலிகள் (Stock Footage) அல்லது குரல் பதிவு இல்லாத ரியாக்சன் காணொலிகள் ஆகியவை பணமதிப்பாக்கத்திற்குத் தகுதியற்றவை. பார்வையாளர்கள் உங்களை நினைவில் வைத்துக் கொள்ளும் தனித்துவம் (Authenticity) இருந்தால்தான் யூடியூப் அதை வருமானம் தரும் உள்ளடக்கமாகக் கருதும்.

- இசை (Music) பயன்படுத்தினால் வருமானம் குறையும்.
- தனித்துவமாக, சொந்த தயாரிப்பாக இல்லாத காணொலிகள் வருவாய் ஈட்டாது.

நிலைத்த வருமானத்தின் வழி

குறுங்காணொலிகள் பார்வையாளரை விரைவில் கவரக்கூடியவைதான். ஆனாலும் நிலைத்த வருமானம் (Sustained Revenue) தருவது நீளமான காணொலிகள்தான்.

நீளமான காணொலிகளின் நன்மைகள்:

வாரத்திற்கு குறைந்தது இரு நீளமான வீடியோக்கள் (7-10 நிமிடம்) + மூன்று குறுங்காணொலிகள் என பதிவிடலாம். இந்த கலவையான உத்தி (Hybrid Strategy) உங்கள் சேனலுக்கு வலிமை சேர்க்கும்.

காப்புரிமை மற்றும் தரமான உள்ளடக்கம் (Copyright & Quality)

யூடியூப்பில் பணம் ஈட்டுவது எளிதல்ல, ஆனால் விதிகளைப் பின்பற்றினால் நிச்சயமாக சாத்தியம்.

- காணொலி தனித்துவமாக இருப்பது அவசியம்.
- உங்களுக்கு காப்புரிமை உள்ள இசையை மட்டுமே பயன்படுத்தவும்.
- விதிமுறைகளை மீறாத காணொலிகள் மட்டுமே பணமதிப்பாக்கம் செய்யப்படும்.

இணைப்பு சந்தைப்படுத்தல் (அஃபிலியேட் மார்க்கெட்டிங் –Affiliate Marketing

பல காணொலிகளில் ஒரு பொருளைப் பயன்படுத்திய தங்கள் அனுபவத்தைப் பகிரும் வீடியோ பார்த்திருப்பீர்கள். அப்போது இணைப்பை (Product Link) வீடியோவின் ஓரத்தில் தெரிவதைப் பார்த்து இருப்பீர்கள். அதை சொடுக்கி ஒருவர் பொருள் வாங்கினால் வீடியோ போட்டவருக்கு, ஒவ்வொரு வாங்குதலுக்கும் 20- 50 வரை வருமானம் கிடைக்கும். நீங்களும் உங்கள் வீடியோவில் அப்படி சுட்டி சேர்க்கலாம். அந்த இணைப்பின் மூலம் விற்பனை நடைபெற்றால் கமிஷன் வரும்.

யூடியூப் ஸ்டோர் (YouTube Store Integration)

யூடியூப் ஸ்டோர் என்பது உங்களின் டிஜிட்டல் கடை என்று புரிந்து கொள்ளுங்கள். அதற்காக YouTube Studio Earn Shopping Connect Store என்ற இணைப்பில் வணிகத்தை தொடங்கலாம்.

இதனால் என்ன மாற்றம் என்றால், முன்பு - "பார்வையாளர் பார்த்தார்." ஆனால், இப்போது - "பார்வையாளர் வாங்குவார்" அதிலிருந்து வருவாய் ஈட்ட முடியும்.

மொத்தத்தில் கீழ்க்கண்ட 10 கேள்விகளை அடிக்கடி கேட்டு, உங்கள் வீடியோ குறித்து சுய ஆய்வு செய்து கொள்வது மிகச்சிறப்பாக பணமதிப்பாக்கம் செய்ய நமக்கு உதவும்.

சுய ஆய்வுக்கான 10 அம்சங்கள்

- உண்மையான குரலும் முகமும் உள்ளதா?
- இசை காப்புரிமையுள்ளதா?
- செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டுள்ளதா?
- ஆதாரங்கள் முறையாக உள்ளனவா?
- குழந்தைகளுக்கானவை "Made for kids" மூலம் சரியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா?
- Paid Promotion அறிவிக்கப்பட்டுள்ளதா?
- தலைப்பும் படமும் தவறாக வழிநடத்துகின்றனவா?
- பின்னூட்டங்கள் முறையாக கையாளப்பட்டுள்ளதா?
- விளக்கக் குறிப்புகள் (Captions (Tamil / English) உள்ளனவா?
- விதிமுறைகள் இதற்கு முன் மீறப்பட்டுள்ளனவா?

“உழைப்புக்கும் திட்டமிடலுக்கும் ஏற்ற ஊதியம் எப்போதும் உண்டு.”

வருமானம் என்றாலே உழைப்பின் விளைவுதான். யூட்யூப் ஒரு டிஜிட்டல் தளம். யூட்யூப் மோனட்டைசேஷன் ஒரு டிஜிட்டல் ஊதிய ஒப்பந்தம். முறையாக பயன்படுத்துங்கள். உழைப்புக்கும் திட்டமிடலுக்கும் ஏற்ற ஊதியம் எப்போதும் உண்டு.

அடுத்த மாதம் வேறொரு சுவாரசியமான கட்டுரையில் சந்திப்போம்.

– ஹரிஹரன் ஈ கா செ

மகளிர் முன்னேற்றம்

நேர்காணல்

நான் முதல்வன் திட்டம் கொடுத்த வாழ்க்கை

எத்தனையோ சின்னஞ்சிறு கிராமங்களில் இருந்து உயர்ந்த படிப்புக்கு முன்னேறிச் செல்வதெல்லாம் திரைப்படங்களில் மட்டுமே சாத்தியம் என எண்ணுவோரின் மனத்தில் நிஜத்திலும் அப்படி நடக்கும் என காட்டி இருப்பவர் யோகேஸ்வரி. தமிழ்நாடு அரசு அறிமுகப் படுத்திய 'நான் முதல்வன்' திட்டத்தினால் இன்று மும்பையில் உள்ள, ஐஐடி பாம்பேயில் விண்வெளி பொறியியல் படிக்கிறார். மாணவி யோகேஸ்வரியைப் பற்றித்தான் அறிந்து கொள்ளப் போகிறோம்.

இவர் விருதுநகர் மாவட்டம், படந்தால் கிராமத்தைச் சேர்ந்த மாணவி. இவரது தந்தை தேநீர் கடையில் வேலை செய்யும் செல்வம். தாய் பட்டாசு ஆலையில் பணிபுரியும் கூலித் தொழிலாளி கனகவள்ளி. இத்தம்பதியின் மகள்தான் யோகேஸ்வரி.

உயரம் குறைவான மாற்றுத்திறனாளியான இவர், தான் எட்ட வேண்டிய உயரம் விண்வெளியே என்று முன்னேறிச் செல்கிறார். அவருக்கு முற்றம் இதழ் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, அவரோடு உரையாடினோம். இனி யோகேஸ்வரியின் குரல் ஒலிக்கும்...

வாரம் ஏழு நாட்கள் வேலை

விருதுநகர் மாவட்டம், படந்தால் தான் என்னுடைய ஊர். 10 ஆம் வகுப்பு வரைக்கும் அரசு உதவி பெறும் எஸ்.எச்.என். ஈத்தல் ஹார்வே பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிச்சேன். 11 ஆம் வகுப்பு படந்தால் அரசு மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன்.

அப்பா டீ மாஸ்டர், அம்மா ஒரு நாளுக்கு ரூ.300 சம்பளத்திற்காக பட்டாசு ஆலைக்கு வேலைக்கு போறவங்க. பட்டாசு ஆலையில் வேலை இல்லனா, வேற கூலி வேலைக்குப் போவாங்க. என்ன உடம்பு வலியா இருந்தாலும் வாரம் ஏழு நாட்களும் வேலைக்குப் போவாங்க. "உடம்ப பாத்துக்கங்க அம்மா, வேலைக்குப் போகாதீங்க" என நானோ, அண்ணாவோ யார் சொன்னாலும் கேட்க மாட்டாங்க.

எனக்கு இரண்டு அண்ணாக்கள், இரண்டு பேருமே படிக்கும் போதே பகுதி நேர வேலைக்கு போனாங்க. வீடும் வாடகை வீடு தான். அதனால, நானும் காலேஜ் சேர்ந்து வேலைக்குப் போய் படிக்கணும் என தீர்மானம் செய்திருந்தேன். அந்த நேரத்தில் என் வாழ்க்கையில் நடந்த நல்ல விஷயம் தான் 'நான் முதல்வன்' என்னும் திட்டம்.

வாழ்வை மாற்றிய திட்டம்

11 ஆம் வகுப்பு வரையிலும் ஐஐடி கனவெல்லாம் இல்ல. எல்லோரையும் போல சின்ன வயசில் நானும் டாக்டர் ஆகணும்னு தான் நினைச்சேன். எங்க ஸ்கூலில் உயர்கல்வி வழிகாட்டுதலுக்காக ஒரு வகுப்பு நடக்கும். அந்த வகுப்பு ஆசிரியர் சொல்லித்தான் ஐஐடி, என்ஐடி, ஐஐஐடி பத்தி எல்லாம் தெரியும்.

அப்படியே மாதங்கள் செல்ல, ஒருநாள் 'மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து, நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி கொடுக்கப்

என் வாழ்க்கையில் நடந்த நல்ல விஷயம் தான் 'நான் முதல்வன்' என்னும் திட்டம்.



போறாங்க, உன்னை தேர்வு செய்து இருக்காங்க' என்று ஸ்கூல் டீச்சர் சொன்னாங்க. எனக்கு அங்க என்ன நடக்கும், என்ன சொல்லித் தருவாங்கனு ஐடியாவே கிடையாது. கலெக்டர் ஆபீஸ் சார்பா ஒரு ஆன்லைன் மீட்டிங் நடந்துச்சு. அதுல உயர்கல்வி வழிகாட்டியான நெடுஞ்செழியன் சார் பேசினாரு. அவர் ஐஐடி பத்தி தெளிவா சொன்னாரு, கொஞ்சம் கொஞ்சமா ஐஐடி மேல ஆர்வமும் ஆசையும் உண்டாச்சு.

ஜேஇஇ தேர்வுக்கு எப்படி விண்ணப்பிக்கணும் என்று கூட எனக்கு தெரியாது. நான் முதல்வன் திட்டம் வழியாதான் ஐஐடி என்று ஒரு கல்விநிறுவனம் இருக்குனே எனக்கும் என் அம்மா அப்பாக்கும் தெரியும். 'எழுதுங்க கிடைக்கும்' என்று நெடுஞ்செழியன் சார் தான் விண்ணப்பிக்க ஹெல்ப் பண்ணினாரு. ஜேஇஇ மெயின்ஸ் தேர்வு முந்தைய நாள் எப்படி எழுத வேண்டும், எந்த கேள்விகளை எழுதலாம் என்று வழிகாட்டினாங்க.

எல்லா ஸ்டூடண்ஸ் மாதிரி எனக்கும் கவனச்சிதறல்கள் வரும். என்னோட பள்ளிப் படிப்பு மொத்தமும் தமிழ்வழி தான். அதனால, ஆங்கிலவழி புத்தகங்கள், அறிவியல் பெயர்கள் எல்லாம் படிக்க ரொம்ப சிரமமாக இருக்கும். அப்போலாம் டீக்கடையில் என் அப்பாவும், பட்டாசு ஆலையில் என் அம்மாவும் கஷ்டப்படுவத நினைச்சுப்பேன். 'இனி என் பேமலில யாரும் கஷ்டப்படக்கூடாது' என்று யோசிச்சு என் மொத்த கவனத்தையும், நேரத்தையும் படிப்பில் செலுத்துவேன். அப்படி தொடர்ந்து படிச்சதால, கலெக்டர் ஆபீஸ்ல கொடுத்த பயிற்சியால ஜேஇஇ மெயின்ஸ் பாஸ் பண்ணிட்டேன். இதுக்கு அடுத்து நடந்த நிகழ்வுகள்லாம் நான் எதிரே பார்க்காதவை.

'இனி என் பேமலில யாரும் கஷ்டப்படக்கூடாது' என்று யோசிச்சு என் மொத்த கவனத்தையும், நேரத்தையும் படிப்பில் செலுத்துவேன்.

தனியே ஈரோட்டில்

12 ஆம் வகுப்பு வரைக்கும் நான் தனியாக எங்கயும் போய் தங்கியது இல்ல. இந்தமுறை ஜேஇஇ அட்வான்ஸ் தேர்வு பயிற்சிக்காக தனியாக ஈரோட்டில் தங்கி இருந்தேன். ஒரு நாள் ரெண்டு நாள் இல்ல; 35 நாட்கள் அங்கேயே தங்கி பயிற்சி எடுத்தேன். துறை வல்லுநர்கள், ஜேஇஇ தேர்வில் வென்றவர்கள், பேராசிரியர்கள் இப்படி பலர் பயிற்சி தந்தாங்க.

ஒவ்வொரு படிப்புல இருக்கும் சாதக பாதகம் பத்தி தெரிஞ்சிக்க முடிஞ்சுது.

நாங்க கிட்டத்தட்ட 300 பேர் அந்த இடத்துல தங்கி இருந்தோம். அந்த 35 நாட்களுக்கும் எங்க வகுப்புகள், தங்குதல்,சாப்பாடு என்று எல்லாமே அரசே பாத்துக்கிட்டாங்க. அங்க இருந்த நாட்கள் எல்லாமே ஜாலியாக போச்சு. இருந்தாலும் எனக்கு என் வீட்டின் ஞாபகம் அடிக்கடி வரும். முதல் ஒரு வாரம் வீட்டுக்கு வீடியோ கால் பேசும்போது, கிளம்பி வீட்டுக்கு போய்டலாம் என தோன்றும். அங்க இருந்த கோச்சிங் டீச்சர்ஸ், ஹாஸ்டல் வார்டன் எல்லாரும் 'பாதி வழியில் விட்டுடாத, கொஞ்சம் கஷ்டப்பட்டா ஒரு நல்ல லைப் உனக்கு இருக்கு' அப்படி சொல்லி என்னை ஊக்கப்படுத்துவாங்க.

“என் படிப்பை நானே சம்பாதிச்சு படிக்க வேண்டிய சூழலில் இருந்து, இப்போ என் படிப்பு, இருப்பிடம், சாப்பாடுன்னு மொத்த செலவையும் அரசாங்கமே ஏத்துக்கிட்டாங்கனு நினைக்கவே கனவு மாதிரி இருக்கு.”

அரசு அளித்த பரிசு

ஜேஇஇ அட்வான்ஸ் தேர்வு முடிவுகள் வந்த நாள என்னால மறக்கவே முடியாது. வார்த்தையால் சொல்லவே முடியாத ஒரு சந்தோஷம் என்னுடைய மொத்த குடும்பத்துக்கும் பரவி இருந்துச்சு.

காலேஜ் படிக்க பக்கத்து மாவட்டம் தான் போவேன்னு நினைச்சேன், ஆனா படந்தால் போன்ற சின்ன கிராமத்தில் இருந்து இந்தியாவிலேயே பாரம்பரியமிக்க காலேஜ்ல சேர்ந்து இருக்கேன். குறிப்பாக, என் படிப்பை நானே சம்பாதிச்சு படிக்க வேண்டிய சூழலில் இருந்து, இப்போ என் படிப்பு, இருப்பிடம், சாப்பாடுன்னு மொத்த செலவையும் அரசாங்கமே ஏத்துக்கிட்டாங்கனு நினைக்கவே கனவு மாதிரி இருக்கு.

நான் ஸ்கூல் படிக்கும் போதும் சரி இப்போவும் சரி, என் வீட்டுல சொல்வது ஒன்னு தான், "இவ்வளவு தூரம் எவ்வளவோ கஷ்டப்பட்டு வந்துட்ட, இதுக்கு அப்பறம் படிப்புல ஜெயிச்சி நல்லபடியா வரணும்." என்னுடைய பெரிய அண்ணா பாண்டீஸ்வரன், நான் இங்கிலீஷ்ல சரளமா பேசணும்னு தினமும் என்கிட்ட உரையாடறாங்க.

என்னைப் போன்ற அரசு பள்ளி மாணவர்களுக்காக அரசு நிறைய நலத்திட்டங்களை தராங்க. நாம அதை ஒழுங்கா பயன்படுத்தணும். நான் 600க்கு 400 மதிப்பெண் எடுக்கற மாணவி தான். அரசுடைய நான் முதல்வன் திட்டமும் என்னுடைய தொடர் உழைப்பும் தான் இப்போ ஐஐடி பாம்பே வரை கூட்டி வந்திருக்கு. இந்த ஜேஇஇ பயணத்துல இருந்து, 'ஆங்கிலம் ஒரு மொழிதான், முயற்சி செஞ்சா தாராளமா கற்கலாம்' என்பதையும் கற்றேன்.

ஐஐடி பாம்பே

ஐஐடி பாம்பே வந்து 3 மாதங்கள் ஆகுது. ரொம்ப நல்ல அனுபவமா இருக்கு. உள்ள வரும் போது பயமா இருந்துச்சு. எல்லாமே இங்கிலீஷ் அல்லது ஹிந்தி தான் இங்க. அதனால கொஞ்சம் தடுமாறினேன். இங்க படிக்கும் சக மாணவர்கள், சீனியர்ஸ், ஆசிரியர்கள் எல்லாரோட ஆதரவால இப்போ முன்னேற்றம் இருக்கு. முக்கியமா என்னுடைய சீனியர் ஓவியா, காலேஜ்ல என்னுடைய இன்ஸ்பிரேஷன் அவங்கதான். அவங்க இப்போ இன்டர்ன்ஷிப்காக பிரான்ஸ் போய் இருக்காங்க.

இப்போதைக்கு என்னுடைய இலக்கு ஐஐடி ரேங்க் ஹோல்டர் ஆகணும். இப்படி, புது மனிதர்கள், இடம், மொழி, அனுபவம், இலக்குனு ஒவ்வொரு நாளும் ரொம்பவும் உற்சாகமா நகருது. நிறைய கற்க ஆர்வமா இருக்கேன்.

7 ஆம் வகுப்பு முதல் எனக்கு கல்பனா சாவ்லாவும், சுனிதா வில்லியம்ஸும் பிடிக்கும். அவங்கள மாதிரியே விண்வெளிக்கு போகணும் என்பதே என்னுடைய லட்சியம். என்னுடைய உயரம் என் சாதனையின் அளவுகோல் அல்ல என்று கூறி புன்னகையோடு விடைபெற்றார் யோகேஸ்வரி.

– ப.க.புகழ்ச்செல்வி

மகளிர் சுய உதவிக்
குழுக்களின்
தயாரிப்புப் பொருட்கள்

வணிகம் வளர்க்க

நட்சத்திரா மகளிர் சுய
உதவிக் குழு,
சிவகங்கை மாவட்டம்.
கைபேசி : 81100 68966

**சிறுதானிய சத்து மாவு,
மாப்பிள்ளை சம்பா
அரிசி புட்டு மாவு**

பண்ணை மகளிர் சுய உதவிக் குழு,
சிவகங்கை மாவட்டம்.
கைபேசி : 89035 31648

**தரமான தேங்காய்
எண்ணை,
மஞ்சள் தூள்**

மகளிர் மேம்பாட்டு
மன்றம்,
தென்காசி மாவட்டம்.
கைபேசி : 96773 42655

**பல்வேறு பொருட்களில்
செய்யப்பட்ட பரிசுப்
பெட்டிகள்**

காளப்பகுளம் ஊராட்சி
அளவிலான கூட்டமைப்பு,
தென்காசி மாவட்டம்.
கைபேசி : 98421 93005

**மங்கையர் மனதை
மயக்கும் புடவைகள்**

சுப்புலாபுரம்
ஊராட்சி அளவிலான
கூட்டமைப்பு,
தென்காசி மாவட்டம்.
கைபேசி : 88071 02195

**தரமான கைத்தறி
துண்டுகள்**

வெண்தாமரை மகளிர்
சுய உதவிக் குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
கைபேசி : 94877 29134

**நெல்லி வத்தல், நெல்லி
பற்பொடி, சர்க்கரை நெல்லி,
பூசணிக்காய் ஸ்வீட், கைக்குத்தல்
மாப்பிள்ளை சம்பா அரிசி**

மதி

மகளிர் சுய உதவிக் குழுவை மேலும் வளர்க்க எண்ணுவோர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் இயங்கும் 'மதி சந்தை' (www.mathisandhai.com) எனும் வலைதளம் வழியே பொருட்களை வாங்கலாம்.

முதலீட்டுக்கு மாத வருமானம் கொடுக்கும் முத்தான திட்டம்!

பெண்கள், மூத்த குடிமக்கள், ஓய்வூதியதாரர்கள் உட்பட பலரும், தாங்கள் சேமித்து வைத்த தொகையை பாதுகாப்பாக முதலீடு செய்ய, அரசு அல்லது தனியார் வங்கிகளில் நிலையான வைப்பு நிதித் திட்டங்களை (Fixed Deposits) தேர்வு செய்கின்றனர். அப்படித் தேர்வு செய்யும் பட்சத்தில், நம் முதலீட்டுக்கான வட்டித் தொகையை மாதாமாதம் வழங்கக்கூடிய நடைமுறை இருக்காது. இதனால், மாதச் செலவுகளை சமாளிப்பதில் சிலர் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். இத்தகைய சிரமங்களைத் தணிக்கும் விதமாகக் கொண்டு வரப்பட்ட திட்டமே, "அஞ்சல் அலுவலக மாத வருமான கணக்கு (Post Office Monthly Income Account)".

திட்டத்தில் இணைவது எப்படி?

இந்தியாவில் உள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் இக்கணக்கைத் துவங்க முடியும். இந்தியக் குடிமக்கள் எவராயினும் இத்திட்டத்தில் முதலீடு செய்யலாம். நம் முதலீட்டுத் தொகைக்கு ஏற்ப, வட்டியானது மாதந்தோறும் வழங்கப்படும். வயது வரம்பு கிடையாது. 10 வயதுக்கு மேற்பட்டவர்கள், தங்கள் கணக்கை தாங்களே நிர்வகிக்க முடியும். 10 வயதுக்கு கீழ் உள்ளவர்கள், தங்கள் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர் மூலம் கணக்குத் தொடங்கி நிர்வகித்து வரலாம். வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) இத்திட்டத்தில் பயன்பெற முடியாது. தனிநபராகவோ அல்லது மூன்று பேர் வரை கூட்டாகவோ, இணைந்து கணக்கு தொடங்கி முதலீடு செய்து வரலாம்.

தேவையான ஆவணங்கள்

- சேமிப்புக் கணக்கு தொடங்கியிருத்தல் அவசியம்
- ஏதேனும் ஒரு அடையாள அட்டை
- கடவுச்சீட்டு அளவு புகைப்படம்
- பான் (PAN) அட்டை இத்துடன் விண்ணப்பப் படித்தை பூர்த்தி செய்து, ரொக்கம், காசோலை, கேட்பு காசோலை (DD), இவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலமாக முதலீடு செய்யலாம்.
- இணைய வங்கி (e-banking) வசதி மூலமாகவும் பயன்பெறலாம்.

வட்டியும் முதலும்!

இந்த 'அஞ்சல் அலுவலக மாதாந்திர வருமான' திட்டத்தின் முதிர்வு காலம் 5 ஆண்டுகள் ஆகும். நம் முதலீடானது குறைந்தபட்சம் ரூ. ஆயிரமாகவோ அல்லது ரூ. ஆயிரத்தின் மடங்குகளிலோ இருக்க வேண்டும். ஒரு கணக்கில், ஒரு வைப்பு (Deposit) மட்டுமே இருக்க முடியும். தனிநபர் கணக்கில் ரூ. 9 லட்சம் வரை முதலீடு செய்து கொள்ளலாம். கூட்டுக் கணக்கைப் பொறுத்தவரை, ரூ.15 லட்சம் வரை முதலீடு செய்யலாம். ஒருமுறை செய்யும் முதலீடானது, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு திரும்பப் பெற முடியாத வகையில் பூட்டப்பட்டு (Lock-in-period) விடும்.

இத்திட்டத்துக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 7.4 சதவிகிதம் ஆகும். முதலீட்டுத் தொகையைப் பொறுத்து, அதற்கான வட்டித்தொகை ஒவ்வொரு மாதமும் கணக்குதாரரின் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். உதாரணமாக, ஒருவர் ரூ. இரண்டு லட்சம் (ஆண்டுக்கு 7.4 % வட்டி) முதலீடு செய்கிறார் எனில், அவரது கணக்கில் ஒவ்வொரு மாதமும் ரூ. 1

ஆயிரத்து 233 வட்டித் தொகை ஐந்து ஆண்டுகளுக்கு வரவு வைக்கப்படும். ஒவ்வொரு மாதமும் வரவு வைக்கப்படும் வட்டித் தொகையை கணக்குதாரர் கோரவில்லை எனில், அந்த வட்டிக்கு கூடுதல் வட்டி எதுவும் கிடையாது. 'தானியங்கி வரவு வைக்கும் வசதி' (Auto credit facility) மூலம் வட்டித் தொகையை அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கிலோ அல்லது வங்கிக் கணக்கிலோ நேரடியாகப் பெறலாம்.

வரிச்சலுகை கிடையாது!

இது வைப்புநிதி திட்டம் என்பதால், வருமான வரிச் சட்டப் பிரிவு 80C -இன் கீழ் வழங்கப்படும் வரிச் சலுகைகள் அளிக்கப்படாது.

ஆனால், உங்கள் முதலீட்டுக்கு கிடைக்கும் வட்டிக்கு மட்டுமே வருமான வரி உண்டு. முதலீட்டுக்கு இல்லை. இவ்வரிக்கான சதவிகிதம் என்பது அந்நபரின் வருமான வரி வரம்புக்கு (Income tax slab) உட்பட்டது.

அதேசமயம், வட்டி வருமானத்துக்கு மூலத்திலிருந்து பிடிக்கப்படும் வரி (TDS) கிடையாது.

நியமனதாரர் பதிவு செய்யலாம்!

இத்திட்டத்தில் இணையும் போதே, நம் கணக்குக்கான நியமனதாரரைப் (Nominee) பதிவு செய்து கொள்ள முடியும். கெடுவாய்ப்பாக, முதிர்வு காலத்திற்கு முன்பே கணக்குதாரர் இறக்க நேரிட்டால், இத்திட்டத்தின் அனைத்து பலன்களும் நியமானதாரரைச் சென்று சேரும்.

முன்கூட்டியே கணக்கை முடிக்கலாம்!

கணக்கு திறக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடம் நிறைவடைவதற்கு முன்பாக, கணக்கை முடிக்க அனுமதிக்கப்படாது. மூன்று ஆண்டுகள் நிறைடையும் முன்னரே கணக்கு மூடப்பட்டால், வைப்புத்தொகையிலிருந்து 2 சதவிகிதத்துக்கு சமமான தொகை கழிக்கப்பட்டு மீதமுள்ள தொகை திருப்பி வழங்கப்படும். மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து, கணக்கு மூடப்பட்டால், வைப்புத்தொகையில் 1 சதவிகிதத்துக்கு சமமான தொகை கழிக்கப்படும்.

பொதுவான நெறிமுறைகள்

- முதிர்வு காலம் – ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு, கணக்கை முடித்து வைப்புத் தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
- முதிர்வு காலத்திற்கு முன்பே கணக்குதாரர் இறந்துவிட்டால், உரிய சான்றிதழ்களைச் சமர்ப்பித்து கணக்கை முடித்துக் கொள்ள முடியும். மேலும், பணத்தைத் திரும்பப் பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரையிலான வட்டியுடன் சேர்த்து வைப்புத் தொகை திருப்பி அளிக்கப்படும்.
- முதிர்வு காலம் நிறைவடைந்தும் கணக்கு மூடப்படாமல் இருந்தால், வைப்புத் தொகைக்கான வட்டி அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கிற்குப் பொருந்தக்கூடிய விகிதத்தில் அளிக்கப்படும்.
- முதிர்வு காலத்திற்குப் பிறகு, அதே கணக்கை நீட்டிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ முடியாது.
- குழந்தைகள் பெயரில் கணக்கு தொடங்கும் போது, கணக்குதாரர் 18 வயதை எட்டிய பின்னர், தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து வயது வந்தோருக்கான கணக்காக மாற்ற வேண்டும்.
- வைப்புத் தொகையை காசோலையாக வழங்கும் போது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியே கணக்கு திறக்கும் தேதியாகக் கருதப்படும்.
- குறிப்பிட்ட அஞ்சல் அலுவலகத்தில் தொடங்கப்பட்ட கணக்கை, இந்தியாவிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்துக்கும் மாற்றிக் கொள்ள முடியும்.

இது ஒன்றிய அரசின் உத்தரவாதத்துடன் கூடிய திட்டம் என்பதால், நம் முதலீட்டுக்கு முழு பாதுகாப்பு உண்டு. முதலீட்டுக்கு அபாயம் நேராமல், சீரான மாத வட்டி வருமானம் எதிர்பார்க்கும் இல்லத்தரசிகள், மூத்த குடிமக்கள், ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறுவீராக!

–பெ.ரமணஹரிஹரன்

அறிய வேண்டும் டிஜிட்டல் நல்லொழுக்கம்!

சைபர் குற்றவாளிகளிடம் இருந்து நன்னடத்தையை எதிர்பார்க்க முடியாது தான். பணம் பறிப்பதற்காக தாக்குதல் நடத்துவது தான் அவர்களுடைய இயல்பு. இருப்பினும், இப்படி தரம் தாழ்ந்து நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கவில்லை என சைபர் பாதுகாப்பு வல்லுனர்களை திகைக்க வைத்த சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மழலையர் பள்ளி கம்ப்யூட்டர் அமைப்பில் சைபர் குற்றவாளிகள் கைவரிசை காட்டி, எட்டாயிரத்திற்கும் மேலான குழந்தைகளின் புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை களவாடிச்சென்றுள்ளனர். பிரிட்டன் தலைநகர் லண்டனில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. ஹேக்கர்கள் உள்ளிட்ட சைபர் குற்றவாளிகள் தாக்குதல் நடத்துவது புதிதல்ல. வர்த்தக நிறுவனங்களும், அரசு அமைப்புகளும் அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. ஒரு சில தருணங்களில் மருத்துவமனைகளிலும் சைபர் தாக்குதல் நடைபெற்றுள்ளது. ஆனால், மழலையர் பள்ளியில் தாக்குதல் நடந்திருப்பது இதுவே முதல் முறை என கருதப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள ரேடியண்ட் எனும் குழு, சைபர் நிழல் உலகம் என கருதப்படும் 'இருள் வலை'யில் (டார்க் வெப்), தங்கள் வசம் உள்ள திருடப்பட்ட தகவல்களில் இருந்து பத்து குழந்தைகளின் படங்கள் மற்றும் தகவல்களை வெளியிட்டுள்ளனர். பெற்றோர்கள் சிலரை தொடர்பு கொண்டு பணம் கேட்டு மிரட்டிய குற்றவாளிகள், அடுத்த கட்டமாக மேலும் பல குழந்தைகளின் தகவல்களை வெளியிடுவோம் என மிரட்டியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான கிடோ மழலையர் பள்ளி சங்கிலித்தொடர் பள்ளிகளை நடத்தி வருகிறது. லண்டன் தவிர, அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியாவிலும் பள்ளிகளை கொண்டுள்ளது. பள்ளி சார்பாக குழந்தைகள் புகைப்படங்கள் மற்றும் தகவல்களை பகிர பயன்படும் பேம்லி எனும் மென்பொருள் அமைப்பு வாயிலாக இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது. குழந்தைகளை குறி வைக்கும் அளவுக்கு தாக்காளர்கள் மோசமாக நடந்து கொண்டுள்ளது மிகவும் கவலை

முக்கியமாக பிள்ளைகளுக்கு டிஜிட்டல் நல்லொழுக்கத்தையும் கற்றுத்தர வேண்டும்.

அளிக்கிறது என ஷேர் பாயிண்ட் எனும் சைபர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. தாக்காளர்கள் மிரட்டலுக்கு பயந்து பணம் கொடுப்பது மேலும் பாதிப்பை உண்டாக்கலாம் என்றும் எச்சரித்துள்ளனர்.

நிச்சயம் இந்த தாக்குதல் பள்ளி நிர்வாகங்களுக்கும், பெற்றோர்களுக்கும் எச்சரிக்கை மணி தான். சைபர் பாதுகாப்பில் இன்னும் கவனமாக இருக்க வேண்டும் எனும் செய்தியை இது பள்ளிகளுக்கு புரிய வைத்துள்ளதோடு, பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு தேவை என்பதை உணர்த்துகிறது.

பெற்றோர்கள் பள்ளிகளின் சைபர் பாதுகாப்பு அமைப்பு குறித்தும் கவனம் கொள்வதோடு, பிள்ளைகளின் தனிப்பட்ட தகவல்கள் குறித்தும் அக்கறை காட்ட வேண்டும். அதைவிட முக்கியமாக பிள்ளைகளுக்கு டிஜிட்டல் நல்லொழுக்கத்தையும் கற்றுத்தர வேண்டும்.



தாக்குதலுக்கு உள்ளான கிடோ மழலையர் பள்ளி லண்டன் தவிர, அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியாவிலும் பள்ளிகளைக் கொண்டுள்ளது

டிஜிட்டல் பூர்வகுடிகள் என்று வர்ணிக்கப்படும் தற்கால குழந்தைகள் வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி, டிஜிட்டல் சூழலில் வளர்கின்றனர். படிக்கவும், பொழுது போக்கவும் டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்துகின்றனர். வீடியோ பார்ப்பது, இணையத்தில் உலா வருவது போன்ற செயல்கள் அவர்களுக்கு வெகு இயல்பாக இருக்கிறது.

ஆனால் ஆன்லையில் மறைந்திருக்கும் பலவித ஆபத்துகளை அவர்கள் அறிந்திருப்பதில்லை. இதை புரிய வைப்பது பெற்றோர்களின் கடமை. மேலும், ஆன்லைன் வலையில் விழாமல் இருக்க தேவையான சைபர் நல்ல பழக்கங்களையும் கற்றுத்தர வேண்டும். இதை தான் டிஜிட்டல் நன்னடத்தை என்கின்றனர்.

முதலில் இணைய சேவைகளுக்கு பாஸ்வேர்டு உண்டு என்பதையும், இந்த பாஸ்வேர்டு தனித்தன்மையோடு இருக்க வேண்டும் என்பதையும் சொல்லித்தர வேண்டும். அதோடு மென்பொருள்களை பராமரிக்கவும், அவற்றை புதுப்பிக்கவும் கற்றுத்தர வேண்டும்.

மேலும் இணையத்தில் உலாவும் போது, தனிப்பட்ட தகவல்களை பகிரக்கூடாது என்றும், முன்பின் அறிமுகம் இல்லாதவர்களை நேரில் தொடர்பு கொள்ள செல்லக்கூடாது என்றும் புரிய வைக்க வேண்டும். இணையத்தில் பார்க்கும் எந்த விஷயத்தையும் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதை எல்லாம் விட முக்கியமாக, மென்பொருள்களில் உள்ள பெற்றோர்களுக்கான கட்டுப்பாடு வசதியை பயன்படுத்தி பிள்ளைகள் எந்த வகை தளங்களையும், சேவைகளையும் அணுகலாம் என்பதை கட்டுப்படுத்த வேண்டும். அதே போல இ-காமர்ஸ் சேவைகள் தொடர்பான கட்டுப்பாடு அம்சங்களையும் கொண்டிருக்க வேண்டும். பெற்றோர் அனுமதி இல்லாமல் பொருட்களை ஆர்டர் செய்வதை தடுக்க இது உதவும்.

அதே போல வை-பை சேவைகளுக்கும் பாஸ்வேர்டு பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். இப்போது ஏஐ சாட்பாட்கள் பயன்பாட்டிலும் கவனமாக இருக்க வேண்டும்.

சைபர் விளையாட்டு

பள்ளிகள் சைபர் தாக்குதல் தொடர்பாக இன்னொரு கவலை தரும் அம்சமும் தெரிய வந்துள்ளது. பிரிட்டன் பள்ளிகளில் நடைபெறும் சைபர் தாக்குதல்களில் 25 சதவீதம், மாணவர்களே விளையாட்டாக மேற்கொள்ளும் தாக்குதலால் நிகழ்பவை எனும் தகவல் தான் அது. கம்ப்யூட்டர் நுணுக்கங்களை கற்றுக்கொள்ளும் மாணவர்களில் சிலர் விளையாட்டு நோக்கில் பள்ளி கம்ப்யூட்டர் அமைப்புகளில் தாக்குதல் நடத்துகின்றனராம். இதற்கு ஆசிரியர்கள் மறதியாக பாஸ்வேர்டை விட்டுச்செல்வது அல்லது நோட்டு புத்தகத்தில் எழுதி வைப்பது போன்றவை காரணமாகின்றன. இப்படி தவறான செயல்களில் பிள்ளைகள் ஈடுபடுவதையும் டிஜிட்டல் நல்லொழுக்கம் தடுக்க உதவும்.

–சைபர் சிம்மன்

புரிதல்

ஆசிரியர் குறிப்பு

லக்ஷ்மி பாலகிருஷ்ணன்

சென்னையில் பிறந்து தஞ்சையில் வளர்ந்தவர். மென்பொருள் துறையில் பணிபுரிந்தவர். சிறப்புக் கல்வி ஆசிரியராகவும், மனநல ஆலோசகராகவும் இயங்கி வரும் இவர் எழுதாப்பயணம், ஆனந்தவல்லி, மானசா, நெல் விளைந்த கதை போன்ற நூல்களை எழுதியுள்ளார். தற்போது சென்னையில் வசிக்கிறார். கல்லூரிக் காலம் முதலே கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என இலக்கியத் துறையில் இயங்கி வருபவர்.

ஓவியங்கள்:

துர்கா

கல்யாணமான இந்த நான்கு வருடங்களில், நானூறு முறை கேட்ட வார்த்தைகள் தான் என்றாலும் கூட, முதல் தடவை போலவே, ஒவ்வொரு முறை அந்த வார்த்தைகளைக் கேட்கும் போதும், மிளகாயை அரைத்துப் பூசினாற் போலத் தான் பானுவுக்கு எரிகிறது; இன்றும் எரிந்தது.

ஏழரை மணிக்கு அலுவலக பஸ்சை பிடிப்பதற்கு முன்னரே காலைச் சிற்றுண்டி, மதிய சாப்பாடு எல்லாம் தயாராகி விடும். அவளுக்கு மட்டும் எல்லாவற்றையும் டப்பாவில் கட்டி எடுத்துக் கொண்டாக வேண்டும். குணாவுக்கு வீட்டிலிருந்து பத்து நிமிடத்தில் சென்று சேர்ந்துவிடும் தூரத்தில் அலுவலகம் என்பதால், சிற்றுண்டியை சாப்பிட்டு விட்டுக் கிளம்பிப் போய், பின் மதியச் சாப்பாட்டுக்கும் வீட்டுக்கு வருவான்.

மகள் வர்ஷினிக்கு தேவையான மதிய சாப்பாடு, நொறுக்குத் தீனி, குடி தண்ணீர் என, சகலமும் தயாராக மேசை மேல் இருக்கிறது. குழந்தையைக் குளிப்பாட்டி தயார் செய்வதை, வீட்டோடு தங்கி வேலை பார்த்துக் கொண்டிருக்கும் சுசீலாம்மா, பார்த்துக் கொள்வார். பள்ளி பஸ், வீட்டு வாசலுக்கு அருகே வரும் என்பதால், அவளை ஏற்றி விடுவதும், மாலையில் அழைத்து வருவதையும் கூட, அவரே பொறுப்பாக செய்து விடுவார்.

ஆனால், இந்த சுசீலாம்மா கிடைப்பதற்கு முன்னால், திருமணமான முதல் மூன்று வருடங்களில், அவள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. மூன்று வருடத்தில் ஏழு பேர், வேலைக்கு வந்து போயிருக்கின்றனர். வீட்டுக்கு வந்த ஒரே வாரத்தில், தங்களின் இன்றியமையாமையைப் புரிந்து கொண்ட பின், ஒவ்வொருவரும் பானுவைப் படுத்திய



"இப்படி வேலைக்குப் போற பொண்ணை என் தலைல கட்டி, என் வாழ்க்கையையே வீணடிச்சுட்டாங்க என் அம்மா"



பாட்டில், வேலை பார்த்தே ஆக வேண்டும் என்ற அவளின் உறுதி கூட, ஆட்டம் காணத் துவங்கியது.

அந்நேரத்தில்தான், தேவதை போல வந்து சேர்ந்தார் சுசீலாம்மா. கணவனை இழந்து, மகனால் உதாசீனப்படுத்தப்பட்ட வழக்க மான சோகக் கதை அவருடையது. வேறு போக்கிடமில்லை என்ற சுயநலமான காரணம் ஒரு ஓரத்திலிருந்தாலும், பாதிக்கப் பட்டு நிற்கையில், ஒதுங்க இடம் கிடைத்தது என்ற நன்றி விசுவாசத்தையும் இன்னமும், சுமக்கும் ஒரு அப்பாவி. அவர் தயவில் பானுவின் பாடு, கொஞ்சம் நிம்மதியாகவே போகிறது கடந்த ஒரு வருடமாக.

காலை எட்டரை மணி அலுவலகத்துக்கு, குணா எட்டே காலுக்கு வீட்டிலிருந்து கிளம்பினால் போதும். ஆனாலும், வரி வரியாய் பேப்பர் படித்து, நிதானமாய் குளித்து, சாப்பிட்டுத் தயாராக, எப்படியும் ஏழரைக்கு எழுந்தே ஆக வேண்டும். ஆனால், ஏழரைக்கு பஸ் நிறுத்தத்திலிருக்க வேண்டிய பானுவோ, ஏழு பத்துக்கேனும் வீட்டை விட்டு இறங்கியாக வேண்டும். அந்நேரத்தில், சுசீலாம்மாவும் வர்ஷினியைக் கிளப்புவதில் மும்முரமாய் இருப்பார்.

எனவே, அந்த பத்து நிமிட தூக்கத்தை துறந்து, குணா எழுந்து கதவை சாத்திக் கொள்ள வேண்டும். இதை தினம் காலையில் செய்ய வேண்டியிருப்பதாலும், காலை மற்றும் மதிய உணவைத் தானே போட்டுக் கொண்டு சாப்பிடும் துர்பாக்கியம் வாய்த்திருப்பதாலும் தான், குணா அடிக்கடி புலம்புவான்...

"இப்படி வேலைக்குப் போற பொண்ணை என் தலைல கட்டி, என் வாழ்க்கையையே வீணடிச்சுட்டாங்க என் அம்மா" என்று.

பானுவுக்கு மிளகாய் அபிஷேகம் நடத்துவது போல, இவ்வார்த்தைகளை வாரம், இருமுறையேனும் சொல்லிவிடுவது குணாளனின் வழக்கம்.

அவளிடம் சொல்வது மட்டுமல்ல, யாரேனும், எங்கேனும், "உனக்கென்னப்பா, ரெண்டு பேரும் வேலைக்குப் போறீங்க, நல்லா சேமிக்கலாம்' என்று சொல்லிவிட்டால் போதும். பெண்கள் குடும்பத் தலைவியாக மட்டுமே இருக்க வேண்டியதன் அவசியத்தை பற்றி, ஒரு அரை மணி நேர லெக்சரே கொடுத்து விடுவான். அத்தகைய நேரங்களிலும், அருகிலிருக்கை யிலும் பானுவுக்கு இதே எரிச்சல் எழும். வீட்டு வேலைகளில் ஒரு சிறு துரும்பையும் நகர்த்திப் போடாத சோம்பேறி என்பதைத் தவிர, மற்றபடிக்கு அவன் ஒரு நல்ல கணவன் தான். எந்த கெட்ட பழக்கமும் கிடையாது; பண விஷயத்திலும், நல்ல சேமிப்பும், வீட்டுக்கு திட்டமிட்டு சரியாய் செலவு செய்யும் வழக்கமும் உடையவன். ஏன்...

பானு மேலும், வர்ஷினியின் மேலும், கொள்ளைப் பாசம் உள்ளவன் கூடத் தான்.

என்ன செய்ய, ரெண்டு பெண்களுக்குப் பிறகு போதும் என்றிருந்த மாமியாருக்கு, காலம் போன காலத்தில், வந்துதித்த ஆண் பிள்ளைச் செல்வம் - வாராது வந்த மாமணி. செல்லத்துக்கு கேட்க வேண்டுமா? "காக்கா வெள்ளை...' என்று பிள்ளை சொன்னால், அதை திருத்த வரும் கணவர் மேல் தான், எரிந்து விழுவார் அவள் மாமியார் பங்கஜம்.

ஒரு நாள் செய்த பதார்த்தம், மறுநாள் இருக்கக் கூடாது. காலையில் வைத்த சாதம், பொரியல் இதுகளெல்லாம் இரவுக்கு சரி வராது. அதை எடுத்து வேலைக்கு வருபவர்களுக்கு கொடுத்து விட்டு, புதிது தான் செய்வார். இப்போதும் திருச்சிக்குப் போனால், இந்த அறுபதை தாண்டிய வயதுக்கும், அந்த அம்மாள் அப்படித்தான் சமைத்துப் போடுவார் மகனுக்கு.

"வேலைக்காக சென்னை வந்த பின் தான், ஜட்டி பனியனை தானே எடுத்துக் கொண்டு குளிக்கப் போகவே ஆரம்பித்தேன்...' என்று எந்த குற்ற உணர்வுமின்றி சொல்லும் கணவனைப் பார்த்து, கல்யாணமான புதிதில் ஆடிப் போனாள் பானு.

"அப்படி வேலைக்கு வந்த பின்னும், வாராவாரம் சாக்ஸ் முதல் கர்சீப் வரை, அத்தனை துணியையும் மூட்டை கட்டிக் கொண்டு ஊருக்குப் போய் போட்டு விட்டு, முதல் வாரம் துவைத்து, இஸ்திரி போட்டு வைத்திருந்தவற்றை எடுத்து வந்துவிடு வேன்...' என்று வேறு விளக்கினான் குணா.

அப்படியே பழகிய மகனுக்கு, மனைவியும் வீட்டிலிருந்து தன்னை தாங்க வேண்டுமென எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. ஆனால், குணாவின் அப்பா, அம்மா இருவருக்குமே, காலம் போகும் போக்கில் இரண்டு பேரும் சம்பாதித்தால் தான், எண்ணெய் போட்ட சக்கரமாய் வண்டி போகும் என்று அசைக்க முடியாத நம்பிக்கை.

அழகான, அடக்கமான, வேலைக்குப் போகும் பெண்ணாகவும் இருக்க வேண்டும். வசதியான பிறந்த வீடாகவும் இருக்க வேண்டும் என்று ஏகப்பட்ட நிபந்தனைப் பட்டியல் இருந்தது, பங்கஜத்தம்மாளின் கையில். எல்லாவற்றுக்கும் பொருந்தி வந்த இந்த பானுவை, நேரில் பார்த்த பின், "வேண்டாம்...' என்று சொல்ல, குணாளனுக்கும் மனம் வரவில்லை.

பானு வேலைக்குப் போவதால், எந்தவொரு வேலையையும் செய்யாமல் விட்டதில்லை. குழந்தை வர்ஷினிக்கு படிப்பு சொல்லித் தருவதில் ஆரம்பித்து, சமையல், வீட்டு பராமரிப்பு என, சகலமும் ஒரு மாசு

மருவில்லாமல் தான் இருக்கும்.

வேலைக்கு வரும் பெண்கள் விடுப்பு எடுத்தால், குழந்தைக்கு உடல் நிலை சரியில்லையென்றால், குழந்தையின் பள்ளிக்குப் போக வேண்டியிருந்தால் என, எந்தவொரு நிலையிலும் விடுப்பு எடுப்பது அவள் பொறுப்பு என்று ஆனது. "நீங்களும் கொஞ்சம் பகிர்ந்துக்கலாமே...' என்ற கேள்வியைக் கேட்பதையே பானு மறந்திருந்தாள்; கேட்டால் உடனே, "இதுக்குத் தான் நான் வேலைக்குப் போற பொண்ணு வேணாம்ன்னு சொன்னேன்...' என்று ஆரம்பித்து விடுவான்.

வர்ஷினியின் சைனஸ் பிரச்னைக்காக, குழந்தைகள் நல மருத்துவர் ஒரு சோதனையை எடுக்கச் சொல்லியிருந்தார். நகரின் சிறந்த மருத்துவர்களில்

பாப்பாக்காகவோ, எனக்காகவோ என்னிக்காவது நீங்க லீவ் போட்டிருக்கீங்களா என்ன?' என்று கேட்க நினைத்தாள்... ஆனால், அது தேவையில்லாத பிரச்சனைகளை மறுபடியும் கிளறிவிடும்.

ஒருவர் அவர் என்றாலும், அவரிடம் உள்ள பெரிய சிக்கல்... அவர், திங்கள் முதல் வெள்ளி வரையிலும், அதிலும், காலை 11 மணியிலிருந்து 12 மணி வரை மட்டுமே, சோதனை முடிவுகளை பார்ப்பார்.

காலை மற்றும் மாலை வேளைகளில், நோயாளிகளை நேரடியாகப் பார்க்க மட்டுமே அனுமதி; வெறும் சோதனை அறிக்கையை காண்பிக்கவெல்லாம் அனுமதி கிடைக்காது. இது போன்ற விசித்திரமான நிபந்தனைகள், ஏதோ வேலைக்குப் போகும் பெண்களை குறி வைத்து தாக்குவதற்காகவே, நிறைய இடங்களில் வைத்திருப்பது போல, அவளுக்குத் தோன்றும். இதுவாவது பரவாயில்லை, மயிலாப்பூரிலிருக்கும் ஒரு பள்ளியில், முதல் வருடம் முழுவதும் காலையிலிருந்து மதியம் வரை, குழந்தையோடு அதன் தாயும் பள்ளிக்கு வர வேண்டும் என்று ஒரு நிபந்தனை உண்டாம். இதைக் கேட்ட போது, அவளுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே புரியவில்லை.

வழக்கம் போல, அவளது உரிமை விடுப்புகள் அனைத்தும் வருட துவக்கத்திலேயே காலியாகி இருந்தது. சம்பளமில்லா விடுப்புகளும், அநேகம் எடுத்து தீர்த்திருந்தாள். எனவே, வேறு வழியேயின்றி குணாவிடம் வந்தாள்.

"இந்த ஒரு தரம் மட்டும் டெஸ்ட் ரிப்போர்ட்டை நீங்க போய் காமிச்சுட்டு வந்துருங்க குணா. எனக்கு சுத்தமா லீவ் கிடையாது. நீங்க லீவ் கூட போட வேணாம், இரண்டு மணி நேர பர்மிஷன் போதுமே... ஈவ்னிங் உக்காந்து வேலைய முடிச்சுட்டு வந்துருங்களேன், ப்ளீஸ்."

"அர்த்தமில்லாம பேசாத பானு. எப்ப வேணும்னா போய், எப்ப வேணும்னா வரலாங்கற ப்ளெக்சி டைமிங்லாம் சாப்ட்வேர் கம்பெனிகளில் மலையேறி ரொம்ப காலமாச்சு. இப்ப இருக்கற ரிசெஷன் டைம்ல ஆபிஸ்லேர்ந்து லேட்டா கிளம்பறது வேணா நிச்சயம் நடக்கும்; லேட்டா வேலைக்குப் போறதை மட்டும், யோசிக்கவே முடியாது. ஏற்கனவே மிடில் மேனேஜ் மெண்ட்டில் இருக்கும் ஆட்களை குறைக்க, புதுசு புதுசா காரணங்களை கண்டுபிடிச்சு கிட்டிருக்காங்க, இப்ப வந்து என் உயிர வாங்காத."

"ஆமா, இதல்லாம் இல்லைன்னா மட்டும், போயி கிழிச்சிருவீங்களாக்கும். பாப்பாக்காகவோ, எனக்காகவோ என்னிக்காவது நீங்க லீவ் போட்டிருக்கீங்களா என்ன?' என்று கேட்க நினைத்தாள்... ஆனால், அது தேவையில்லாத பிரச்சனைகளை மறுபடியும் கிளறிவிடும். எவ்வளவு தான் சண்டை போட்டாலும், கடைசியில் அந்த வேலையை தானே செய்ய வேண்டியதிருக்கும் என்பதையும், பானு உணர்ந்திருந் தாள்; அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

"என்ன பார்க்குற... இதுபார், வீட்டு விஷயங்களுக்காக ஆம்பளைங்க லீவ் போட்டால், கேக்கறவங்க சிரிப்பாங்க. உன்னால ரொம்ப முடியலைன்னால் ஒரு வழியா வேலைய விட்டுடு..."

"அதானே பாத்தேன், எங்கடா வழக்கமான பல்லவிய இன்னும் காணோமேன்னு... கரெக்டா வந்துட்டீங்களா அந்த பாயிண்ட்டுக்கு... திருச்சிக்கு போன் போடவா,

அத்தைய கேப்போமா - வேலைய விட்டுறவான்னு?" உள்ளுக்குள் அடக்கி இருந்தது, வார்த்தைகளாக வெளியே வந்து விழுந்தது.

"இந்த ஒரு விஷயத்தை சொல்லியே மிரட்டிட்டிரு... அவங்களுக்கு என் கஷ்டம் என்னிக்கு புரிஞ்சிருக்கு சொல்லு? இப்படி ஒரு வேலைக்குப் போற, வேலைக்குப் போகணும்ன்றதை ஒரு மேனியாவா வச்சிருக்கற ஒரு பொண்ணை என் தலைல கட்டி, என் உயிர வாங்கறாங்க. ஊர்ல, உலகத்துல எல்லாப் பொண்ணுங்களும் சந்தோஷமா, செய்யற வீட்டு வேலைகளை, நீ ஏதோ எனக்காக தியாகம் பண்ணுறா மாதிரி, பண்ணுறதையும் சகிச்சுட்டு, உன்னோட நான் குடித்தனம் பண்ண வேண்டியிருக்கு.

"எப்ப பார்த்தாலும் நானே எடுத்து போட்டுகிட்டு திங்கணும், எந்த ஒரு வீட்டு வேலைக்கும், இப்படி நீ செய்; நான் செய்யறேன்னு ஏலம் போடறதை சகிச்சுக்கணும், எவ்ளோ டார்ச்சர்... எல்லாம் எங்கம்மாவால வந்த வினை.

"போகட்டும் போகட்டும்ன்னு பார்த்தா, நீ என்னை கமாண்ட் பண்ற, லீவ் போடுங்க, பர்மிஷன் போடுங்கன்னு... நான் வேலை பாக்கறது கார்பரேட் கம்பெனில. அது என்ன உங்க கவர்மெண்ட் ஆபிஸ்ன்னு நினைச்சியா? யூனியன், மண்ணாங்கட்டின்னு வேலை செய்யாம அழிச்சாட்டியம் செய்யறதுக்கும், ரூல்ஸ் பேசறதுக்கும்? மனுஷனோட அவஸ்தை புரியாம பேசி கிட்டிருக்காதே... என்ன சொன்னாலும், என்னால டாக்டர் வீட்டுக்கெல்லாம் போக முடியாது, புரியுதா?" வீடதிர கத்தி விட்டு, தன் பாட்டுக்கு அலுவலகம் கிளம்பினான் குணா.

எரிச்சலுடனேயே ரிசப்ஷன் பகுதியைத் தாண்டி, வேலையிடத்துக்குள் நுழைய தன் அனுமதி அட்டையை தேய்த்தான். சிவப்பு விளக்கு எரிந்தது. அட்டையை துடைத்து விட்டு, இரண்டு மூன்று முறை தொடர்ந்து தேய்த்தும், "பீப்... பீப்...' என்ற ஒலியுடன் சிவப்பு விளக்கே தொடர்ந்து எரிந்தது. குழப்பத்துடன் திரும்பியவனை பரிதாபமாகப் பார்த்தாள் ரிசப்ஷனிஸ்ட் மாலதி.

"என்ன மாலதி இது? காலங்கார்த்தால இந்த அக்சஸ் கார்டு சொதப்புது... ஏகப்பட்ட வேலை கிடக்குப்பா."

"ஐ ஆம் சாரி டு சே திஸ் குணா... இனி லே ஆப் பண்றவங்களோட அக்சசை உடனடியா நீக்கிருவாங்க.



வேலைக்குப் போற, அதும் கவர்மெண்ட் வேலைக்குப் போற பொண்டாட்டி... உன்னை போல கொடுத்து வச்சவன் யாருமில்லைடா... நிதானமா கூட ஜாப் தேடலாமே...



உங்க நேம் இன்னிக்கு லிஸ்டில் இருக்கு. உங்க செட்டில் மென்ட் டீட்டெயில்ஸ் பத்தி பேச, எப்ப வரலாம்ன்னு ஹெச் ஆர்கிட்டேர்ந்து உங்க பர்சனல் மெயில் ஐடிக்கு மெயில் வரும். இப்ப..." எப்படி முடிப்பதென்று தெரியாமல் இழுத்தாள்.

ஓரளவு எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்று நினைத்திருந்த விஷயம் தான் என்றாலும், அடுத்த நொடியிலிருந்து நீ இங்கே தேவையில்லை என, திடீர் என தூக்கி யெறியப்படுவதின் அதிர்ச்சி தாங்க முடியாததாகத் தான் இருந்தது. கண்கள் கலங்கி விடுமோ என்ற பயத்தில், மூக்கை உறிஞ்சி சமாளித்துக் கொண்டு, பரிதாபமாக புன்னகைத்தான் குணா.

மாடிப்படியருகில் கையில் புகையும், சிகரெட்டோடும், ஓரளவு கலங்கிய கண்களோடும் சுந்தரமூர்த்தி நின்று கொண்டிருந்ததும், தன்னை பார்த்ததும் வேறு புறம் திரும்பியதும், நினைவுக்கு வந்தது குணாவுக்கு. ஒரு வேளை அவனும், இன்றைய பலி ஆடுகளில் ஒருவனோ என்ற எண்ணத்தோடு, வேகமாய் அவனை நோக்கி போனான்.

குணாவின் முகத்திலிருந்தே அவனுக்கும் தன் கதி தான் என்று புரிந்து கொண்ட சுந்தரமூர்த்தி, ஏதும் பேசாமல் ஆதரவாய் குணாவின் தோளில் கை வைத்தான்.

"லாபம் குறையுது, ஆட்குறைப்புன்ற தெல்லாம் கூட சரி தான். ஆனா, இப்படி திடுதிப்புனு சொல்றது தான், மனசுக்கு கஷ்டமா இருக்கு. என்ன அநியாயம்டா இது?"

பேச எதுவுமில்லாது போல மவுனமாக இருவரும் நெடுநேரம் நின்றிருந்தனர்.

"சரிப்பா. போய் ரெஸ்யூமை தூசி தட்டி எடுத்து, எல்லா ஜாப் வெப்சைட்லயும் ஏத்துவோம். வேற என்ன பண்றது?" என்றபடியே கிளம்பத் தயாரானான் குணா.

""உனக்கென்னப்பா கழுத்தை பிடிக்கற அவசரம்? என்னப் போல அடுத்த மாச ஈ.எம்.ஐ.,லேர்ந்து அரிசி பருப்பு வரைக்கும், எல்லாத்துக்கும் கவலைப்பட வேண்டிய நிலையிலயா இருக்க? வேலைக்குப் போற, அதும் கவர்மெண்ட் வேலைக்குப் போற பொண்டாட்டி... உன்னை போல கொடுத்து வச்சவன் யாருமில்லைடா... நிதானமா கூட ஜாப் தேடலாமே... சரி, ஆல் த பெஸ்ட். அப்பப்ப மெயில் பண்ணுடா... பை..."

முதல் முறையாக வேலைக்குப் போகும் மனைவி வாய்ப்பது அதிர்ஷ்டம் என்று ஒருவர் சொல்கையில், மறுத்துப் பேச முடியாமல் விக்கித்துப் போய் நின்றிருந்தான் குணா. ●

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**

முற்றத்திற்கு சந்தா
செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை
Scan செய்யவும்

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 240/-
இரண்டு ஆண்டு	ரூ. 450/-
மூன்று ஆண்டு	ரூ. 680/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

முற்றம் இதழில் உங்களுடைய படைப்புகளான, கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை மற்றும் 'வாழ்ந்துக் காட்டுவோம்' பகுதியில் உங்கள் குழுவின் சாதனைக் கதை இடம் பெற உரிய புகைப்படங்களுடன் கீழ்காணும் மின்னஞ்சல், முகவரி வழியே எங்களை அணுகுங்கள். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@gmail.com

கௌரவ ஆசிரியர்
ஆர். வி. ஷஜீவனா, இ.ஆ.ப.

சிறப்பு ஆலோசகர்
ஐயன் கார்த்திகேயன், பி.டெக்.,

பதிப்பாளர், ஆசிரியர்
எஸ். சின்னப்பன்

மேலாளர்
வா. ராகுலன், PRO

துணை ஆசிரியர்
ஏ. கண்ணன்

பிழை திருத்துபவர்
எஸ்.எஸ். ரவிச்சந்திரன்

வடிவமைப்பு
என்.எஸ். நாணா

புத்தக மேம்பாடு
Aarah Digitainments

ஊரக வளர்ச்சி
மற்றும்
ஊராட்சித்துறை
மலர்: 27
இதழ்: 07
நவம்பர், 2025

கவிதை

சே.பிருந்தா

யாருடைய கிரீடத்தில் முட்கள் இல்லை

மனமுவந்து ஏற்கிறேன்
பரிசுகளைப் போலவே
தண்டனைகளையும்
மகிழ்வைப் போலவே
துக்கத்தையும்
உணவைப் போலவே
கழிவையும்
பாராட்டைப் போலவே
பரிகசிப்பை
வெறும் சிலைகளால்
ஆனதல்ல இவ்வுலகம்,
அது மலைகள் நிரம்பியது.

ஓவியம் துர்கா

மழைக்கால நோய்கள் – வருமுன் காப்போம்!

மழைக்காலம் தொடங்கிவிட்டது. இனி வீட்டில் இருமல், தும்மலின் கச்சேரி களைகட்டும். இம்முறை அக்கச்சேரியை முறியடிக்க நீங்கள் தயாரா ? முற்றம் இதழ் சார்பில், மழைக்கால நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் பற்றி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணிபுரியும் அரசு பொதுநல மருத்துவர் துர்கேசநந்தினி அவர்களிடம் உரையாடினோம்.

மழைக்காலத்தில் பரவும் முக்கிய நோய்கள் என்னென்ன?

மழைக்காலத்தில் முக்கியமாக காய்ச்சல், இருமல், சளி, வயிற்றுப்போக்கு, மலேரியா மற்றும் இன்ஃப்ளுயன்சாஆகியவை பரவலாக காணப்படும். ஏற்கனவே ஆஸ்துமா போன்ற நுரையீரல் நோய்கள் உள்ளவர்களுக்கு இருமல் மற்றும் சளி பிரச்சினை அதிகரிக்கும். டெங்கு காய்ச்சல், எலிக்காய்ச்சல் (இதுவும் ஒருவகை வைரல் காய்ச்சல் தான். லெப்டோஸ்பைரோசிஸ் என்பர். சாக்கடை நீர் கலந்த குடிநீரால் ஏற்படுவது, பிற வைரஸ் காய்ச்சல்களும் ஏற்படக்கூடும்.) உங்களுக்கு காய்ச்சல் வந்தால், முதல் நாள் பாராசிட்டமால் எடுத்துக்கொள்ளலாம். ஒருவேளை, காய்ச்சல் தொடர்ந்தால் அல்லது மேற்கண்ட கடுமையான அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதனை செய்ய வேண்டும்.

மழைக்கால நோய்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

தண்ணீர் தேங்குவதை தடுத்தல்: மழைக்காலத்தில் மிக முக்கியமானது தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது. குறிப்பாக டெங்கு காய்ச்சல் இந்த காலத்தில் கடுமையாக பரவுகிறது. நல்ல தண்ணீர் கொசுக்களால் இது பரவுகிறது என்பதால், செடித் தொட்டிகள் தொடங்கி, மழை நீர் சேர்ந்து இருக்கும் இடங்கள் வரை தண்ணீர் சேராமல் கவனமாக பார்த்துக் கொள்ளவேண்டும்.

டெங்கு கொசு (ஐடிஸ் கொசு) பரவுவதை தடுக்க:

- மழை நீரை சேமிக்கும் பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும்

- தண்ணீர் சேமிப்பு பாத்திரங்களை சுழற்சி முறையில் கழுவ வேண்டும்
- தேங்கிய நீரில் கொசுக்கள் முட்டையிடுவதால், தேங்கிய நீரை அகற்ற வேண்டும்

பொதுவான தடுப்பு முறைகள்:

- வெளியில் சென்று வந்தபின் கைகளை சுத்தமாகக் கழுவ வேண்டும்
- கொசு கடிக்காமல் இருக்க உடலில் repellent (கொசு விரட்டி) தடவ வேண்டும்
- கொசுவலை பயன்படுத்த வேண்டும்
- மழையில் நனையாமல் குழந்தைகளையும் நம்மையும் பாதுகாக்க வேண்டும்
- தனிப்பட்ட சுகாதாரத்தை பேண வேண்டும்

காய்ச்சல் வந்தால் எப்போது மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்? வீட்டில் என்ன சிகிச்சை எடுக்கலாம்?

இன்றும் பலர் நேராக மருந்துக் (மெடிக்கல்) கடைக்குச் சென்று மருந்து வாங்கி சாப்பிடுகிறார்கள். இது தவறானது. சில நேரங்களில் ஆபத்தானதும் கூட!. எல்லா காய்ச்சலும் வெளித்தோற்றத்தில் ஒன்று போலவே இருக்கும். ஆனால் பரிசோதனை செய்தால் மட்டுமே அது டெங்கு காய்ச்சலா? சாதாரண வைரல் காய்ச்சலா?

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor: S. CHINNAPPAN.

டெங்கு காய்ச்சல் மற்றும் சாதாரண வைரஸ் காய்ச்சலை எப்படி வேறுபடுத்துவது? எப்போது பரிசோதனை செய்ய வேண்டும்?

சாதாரண காய்ச்சலுக்கும், டெங்கு காய்ச்சலுக்கும் சில பொதுவான அறிகுறிகள் இருப்பது உண்மை தான், ஆனால் அதன் தீவிரமும், தன்மையும் மாறுபாடும்.

டெங்கு காய்ச்சல்	சாதாரண வைரல் காய்ச்சல்
● கண்ணுக்கு பின்புறம் கடுமையான வலி, பிரேக் போன் ஃபீவர் – எலும்பை முறுக்குவது போன்ற கடுமையான வலி மற்றும் தசை வலி மிகவும் அதிகமாக இருத்தல். ● உடல் அணுக்களின் எண்ணிக்கை குறையும் ● 4–5 நாட்களுக்கு மேல் காய்ச்சல் தொடர்தல். மேலும் பசியின்மை அதிகமாக இருத்தல் ● உடலில் இரத்தக்கசிவு, சருமத்தில் சிவப்பான புள்ளிகள் ஆகியவை இருக்கக்கூடும். ● சளி, இருமல், தொண்டை வலி இருக்காது.	● காய்ச்சல் இருக்கும், ஆனால் கண்ணுக்கு பின்புறம் கடுமையான வலி, பிரேக் போன் ஃபீவர் – எலும்பை முறுக்குவது போன்ற கடுமையான வலி மற்றும் தசை வலி ஆகியவை இருக்காது ● உடல் அணுக்களில் பெரிய மாற்றம் இருக்காது. ● 2–3 நாட்களில் காய்ச்சல் குறைய ஆரம்பிக்கும் ● 4வது நாளில் குணமடைய தொடங்கும். ● இரத்தக்கசிவோ, புள்ளியோ இருக்காது , சளி, இருமல், தொண்டை வலி இருக்கும்.

இன்ஃப்ளுயன்ஸா காய்ச்சலா? வேறு ஏதேனும் காய்ச்சலா? என்பதை மருத்துவரால் மட்டுமே துல்லியமாகக் கண்டறிய முடியும். ஆகவே மருத்துவரை சந்திப்பது அவசியமாகிறது.

எப்போது மருத்துவமனை செல்ல வேண்டும்?

- காய்ச்சல் 3 நாட்களுக்கு மேல் தொடர்ந்தால்
- கடுமையான உடல் வலி, தசை வலி இருந்தால்
- கண்ணுக்கு பின்புறம் வலி இருந்தால்
- பசியின்மை அதிகமாக இருந்தால்
- உடல் பலவீனமாக இருந்தால்
- காய்ச்சல் வந்த முதல் நாள் பாராசிட்டமால் எடுப்பது தற்காலிக நிவாரணம் மட்டுமே. காய்ச்சல் தொடர்ந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்வது நல்லது. மருத்துவரின் ஆலோசனைக்கேற்ப இரத்த பரிசோதனை செய்து, உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மரு.துர்கேசநந்தினி

வேறு யாரெல்லாம் கவனமாக இருக்கவேண்டும்?

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள். இவர்களுக்கு மழைக்கால நோய்கள் வந்தால் கூடுதல் கவனம் தேவை. ஏனெனில் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் விரைவில் நோய் தாக்கும் அபாயம் உண்டு. கர்ப்பிணிப் பெண்களுக்கு சில மருந்துகள் பாதுகாப்பானவை அல்ல. ஆகவே அவர்களும் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம். இவர்களுக்கு காய்ச்சல் வந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். சுய மருத்துவம் செய்யக்கூடாது. முடிந்த அளவில் மழையில் நனையாமல் பாதுகாக்க வேண்டும். சுகாதாரத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சத்தான உணவு அளிக்க வேண்டும். தடுப்பூசிகளை சரியான நேரத்தில் போட வேண்டும்.

இந்த பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றினால், மழைக்காலத்தை ரசிப்பதோடு, ஆரோக்கியமாகவும் இருக்கலாம். **– க. ஸ்ரீநிதி**

Posted at Egmore RMS, Patrika Channel.
RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569/2023
Reg. No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564/2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th-14th November 2025

TNULM

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

Tamilnadu Urban Livelihoods Mission

"கடல்ல அடிக்கிற அலைமாதிரி எங்க வாழ்க்கையும்
மேல கீழ தான் போய்ட்டு இருந்துச்சு.
TNULM திட்டம் மூலம் கிடைத்த வங்கி கடன் மூலமா எங்கள் தொழில்
ஸ்திரமா இருக்கிறதால எங்க வருமானம்
கொஞ்சம் கூடி வாழ்க்கையும் நல்லா போய்ட்டு இருக்கு."

முடியாது என்று சொல்வது
மூட நம்பிக்கை!
முடியுமா என்று கேட்பது அவ
நம்பிக்கை
முடியும் என்று சொல்வதே
தன்னம்பிக்கை

For More Contact Us @

@tnulmlead
@tnulmlead
https://TN Urban Livelihoods Mission

+91 9444094226
www.tnulm.org
tnulmlead@gmail.com

இத்திட்டத்தில் பயன்பெற தொடர்பு கொள்ளுங்கள்

திட்ட இயக்குநர்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

மாநில இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
நுங்கம்பாக்கம், சென்னை–34